
# நீயும் நானும் நினைத்தால்...



## அனுராதா ரமணன்





1

''குழந்தைய பத்திரமாப் பார்த்துக்கப்பா...'' - விநாயகம், கார் கதவைப் பிடித்தபடியே மருமகனிடம் சொல்கிறார்.

''எம்பா..! நீ என்ன, இவங்களை லண்டனுக்கும், சுவிட்சர்லாந் துக்குமா அனுப்பறே... இங்கே இருக்கற கொடைக்கானல். நம்ம வீட்டு வாசல்லேயிருந்து கத்தினா, கொடைக்கானலே திரும்பிப் பார்த்து, 'யோவ் கிழம், இரையாதேயேன்'-னு அதட்டல் போடும். என்னமோ இந்தக் கலக்கு கலக்கறியே...''

ஜம்புலிங்கம் - விநாயகத்தின் சம்பந்தி - அவர் தோளைத் தட்டியபடிச் சொல்கிறார்.

இவர்களது விமரிசனத்துக்குக் காரணமான அந்தக் 'குழந்தை' - சிவப்பு நிற பனாரஸ் ஷிபான் கட்டிக் கொண்டு, அத்தையின் தோளில் முகம் புதைத்தவாறு நிற்கிறது.

''கிளம்பு, கிளம்பு... இப்பவே புறப்பட்டாத்தான் பனி - பஞ்சு பஞ்சா கண்ணை மறைக்கறதுக்குள்ளே மேலே போய் சேரலாம்...''

ஜம்புலிங்கம் அதட்டுகிறார்.

பிருத்வி - எப்போழுதோ ரெடி. ரோஜா நிற பைஜாமாவும், ஜிப்பாவும் அணிந்து, டிரைவர் ஸீட்டில் படு அமர்க்களமாக உட்கார்ந்திருக்கிறான்.

''அப்பா, மாமாவைப் பத்திரமாப் பார்த்துக்குங்க...''

''அட, சரிதான்டா. இத்தனை நாள் - வேற யார் பார்த்துகிட்டாங்களாம்? அங்கே பாரு... அபர்ணா - உங்க அம்மாவை, தன் அழுகையாலேயே குளிப்பாட்டி விடறா... உங்களுக்கென்ன... நீங்க ரெண்டு பேரும் இன்னும் கொஞ்ச நேரத்துல மலையேறிடுவீங்க. உங்க அம்மா - அழுது. முகம் வீங்கி, தலைவலிய வரவழைச்சிட்டு நிற்பா. நானில்லே தைலத்தை வச்சுகிட்டு - அவளோட மல்லுக்கு நிற்கணும்...''

ஜகதா, தன் தோளில் சாய்ந்திருந்த மருமகளின் முகவாயைப் பிடித்து உயர்த்துகிறாள்.

''பத்திரமாப் போயிட்டு வாம்மா. கொடைக்கானல் ஒண்ணும் புதுசில்லே உனக்கு. எதையாவது நினைச்சுக் கவலைப்படாதே.. போனதும் போன் பண்ணு...''

''உக்கும்...''

ஜம்புலிங்கம் மனைவியைப் பார்த்துக் கனைக்கிறார்.

''நமக்கு போன் பண்ணறதுக்காகத்தான் அவங்க இ கொடைக்கானலுக்குப் போறாங்களாக்கும். வயசானா ஞாபக ம அதிகமாயிடும்னு கேள்வி பட்டிருக்கேன். அதுக்காக இப்படி ஆ

பாடமே மறந்து போக வேண்டாம்!''

விநாயகம் கூட வாய் விட்டுச் சிரிக்கிறார்.

ஜம்புலிங்கம் சினிமா பார்ப்பதற்குத்தான் பண்ணையூர் மாதிரி தடபுடலாக இருப்பாரே தவிர - ரொம்பவும் நகைச்சுவை உணர்ச்சி மிகுந்தவர். அவரது பேச்சைக் கேட்பதற்காகவே சிநேகிதப் பட்டாளம் அவரைச் சுற்றிக் கொண்டே இருக்கும்.



## அதிசயப் பெட்டி

### நவமணி

பலர் நவமணி மோதிரம் போட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். முறையான வரிசையோடு போட்டால் தான் பலன் தரும். இடமிருந்து வலம் முதல் வரிசை பச்சை, வைரம், முத்து.

இரண்டாவது வரிசை: புஷ்பராகம், மாணிக்கம், பவளம்.

மூன்றாவது வரிசை: வைடூரியம், நீலம், கோமேதகம்.

அபர்ணா, வண்டியில் ஏறும்போது - மாமாவைப் பார்த்துச் சொல்கிறாள்:

''அத்தையப் பார்த்துக்குங்க.''

''ஆகா. எனக்கு, அதைத் தவிர வேற என்ன வேலை?''

''அமெரிக்காவுலேயிருந்து ஏதாவது தகவல் வந்துச்சுன்னா - எங்களுக்குத் தெரிவியுங்க மாமா...''

ஜம்புலிங்கம், இப்பொழுது சிரிக்கவில்லை. கவலையுடன் முகவாயைத் தடவி விட்டுக் கொள்கிறார்.

''பய எவளையோ கல்யாணம் செஞ்சுகிட்டு நிம்மதியா இருக்கட்டும். வேண்டாங்கலை. அதுக்காக ஒரே தட்டுல, ஒண்ணா சாப்பிட்டு ராம - லட்சுமணன் மாதிரி வளர்ந்த தம்பியோட கல்யாணத்துக்குக் கூடவா வராம இருக்கணும்?''

''இங்கே வந்தா - நாம திட்டுவோம்னு பயந்துட்டு இருக்கானோ என்னவோ...''

-இது விநாயகம்.

ஜகதா, யாரும் பார்க்காத வண்ணம், கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

'குழந்தைங்க நல்ல விஷயமா கிளம்பறப்ப - அபசகுனம் பிடிச்சாப்பல அழக்கூடாது..'

'ஒருத்தன் பெண்டாட்டிய, இன்னொருத்தன் கட்ட முடியாது' - ன்னு பெரியவங்க தெரியாமலா சொல்லி வச்சாங்க?'

ஜகதா என்றைக்குமே இப்படித்தான். கூடுமான வரையில் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு, எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுத்துப் பழகிப் போனவள்... இல்லாவிட்டால் - இன்று அவள்



தலை நிமிர்ந்து நிற்க முடியுமா...

எத்தனை சோகங்களுக்கு, எத்தனைப் புயலுக்கு வளைந்து கொடுத்திருக்கிறாள் அவள்?

எல்லாம் யாருக்காக?

கண்ணுக்குக் கண்ணாய் தன்னை வளர்த்த அண்ணன் - அதோ - ஜம்புலிங்கத்தின் பேச்சைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருக்கிறாரே... விநாயகம் - அவருக்காக.

ஜகதாவை - பெற்ற பெண்ணை விடவும் மேலாக வளர்த்தவரும் அவர்தான்.

தங்கைக்குக் கல்யாணமாகும் வரையில் - தான் ஒருத்தியை மனைவியாய் வீட்டுக்குக் கொண்டு வரக் கூடாது என்று தீவிரமாக இருந்தவர்.

ஜகதாவை மணமுடித்துக் கொடுத்ததும் சாதாரண இடமில்லை. பெரிய இடம். ஒரே மகன். ஜகதா போன போது - வயதான மாமியார் கிழவி ஒருத்திதான். அவளுக்கு, ஜகதாவிடம் கொள்ளைப் பிரியம்.

எல்லாமே சரியாய் இருந்து விட்டால் எப்படி?

தங்கைக்கு மணமாகி, ஜோதீஷ்வர் பிறந்து இரண்டு வயது குழந்தையாக இருந்த போது - விநாயகத்தின் கல்யாணம்.

அண்ணனின் திருமணத்துக்காக - மும்பையிலிருந்து கணவருடன் சென்னை வந்தாள் ஜகதா.

திருமணம் முடிந்ததும், குல தெய்வத்தை தரிசிக்க - தங்கையும், அவள் கணவரும் குடும்பத்துடன் வர வேண்டுமென ஆசைப்பட்டார் விநாயகம்.

''அண்ணா...! மும்பைலே அவருக்கு ஏகப்பட்ட வேலை. மாமியாருக்கு வேற உடம்பு சரியில்லே... இந்த நிலைமையில இங்கே அவர் தங்கினா... அது அத்தனை நல்லாயிருக்காதுன்னு அவர் நினைக்கிறார். 'வேணுமானா நீ, குழந்தையோட இருந்துட்டு வா. நான் நாளைக்கே பிளேன்லே கிளம்பறேன்'ங்கறார். அவரைத் தடுக்கறதும் நியாயமில்லேன்னு எனக்குத் தோணுது...''

''நீ சொன்னா சரிதாம்மா. ஆனா - அவரை இப்ப விடறேன். அடுத்தாப்பல சீக்கிரமே இங்கே வந்து, குறைஞ்சது ஒரு மாசமாவது எங்க கூட சேர்ந்தாப்பல இருக்கலையின்னா... அப்புறம், நான் மும்பைக்கு வரவே மாட்டேன்னு சொல்லு...''

ஜகதா சிரித்தாள்.

''ஏன், மாப்பிள்ளைகிட்ட நீ பேச மாட்டியா? நீயே சொல்லேன்...''

விநாயகம், தங்கை புருஷனின் கைகளைப் பிடித்தபடி - இதைச் சொன்ன போது கூட நினைக்கவில்லை - அப்படியொரு சம்பவம்

''சரிதான். எங்க அம்மா ஒரு பழமொழி சொல்லுவாங்க. **'சேலையில்லேன்னு ஒருத்தி சின்னம்மா வீட்டுக்குப் போனாளாம். சின்னம்மா, அதுவுமில்லாம ஈச்சம்பாய சுத்திட்டு எதிர்த்தாப்பல வந்தாளாம்'னு...** அப்படித்தான் இருக்கும்... நீங்களே ஆறுதல் சொல்ல ஆளில்லாமத் தவிக்கறப்ப - நான் வேற என் கதையச் சொல்றது...''

ஜம்புலிங்கம் சொன்னது, விநாயகத்தின் மனசை ஒரு கலக்கு கலக்கி விட்டது!

அன்றே - தன் மனைவியிடமும், தங்கையிடமும் இது பற்றி, கலந்து பேசுகிறார் அவர்.

ஆரம்பத்தில் ஜகதா, அண்ணனின் யோசனைக்கு ஒப்புக் கொள்ளவே இல்லை.

''அது எப்படி...? என்னாலே இன்னொருவரை மனசார ஏத்துக்க முடியாது...''

''தெரியும். குழந்தைய வச்சிட்டு இத்தனைப் பணத்தையும் வச்சிட்டு - நீ வெத்து வாழ்க்கை வாழறதைப் பார்த்துட்டு - நான் சந்தோஷமா இருக்க முடியுமா... இதப் பாரு. நீ நல்லா இருந்தாத்தான் - நான், உங்க அண்ணியோட சேர்ந்து இருப்பேன். முதுகுல முள்ளை வச்சுக்கிட்டு மல்லாக்கப் படுக்கறாப்பல... நாங்க ரெண்டு பேரும் - உள்ளூர எத்தனை வேதனைப் படறோம்னு தெரியுமில்லே?''

ஜகதா மெல்லிய குரலில் சொன்னாள்:

''ஊர் என்ன சொல்லும் அண்ணா...?''

''ஊர் கிடக்கட்டும். நீ சம்மதிச்சா சரிதான்.''

''நாளைக்கு ஜோதீஷ் என்ன நினைப்பான்... 'அம்மா, இப்படியொரு துரோகத்தை அப்பாவுக்கு செஞ்சிட்டாளே'யின்னு அவன் நினைச்சா - என்னால தாங்க முடியாது அண்ணா...''

அவள், முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

''இதப் பாரு... அவன் காலத்துல - இதெல்லாம் ஒரு பெரிய விஷயமாவே இருக்காது. அவனை, அந்த அளவுக்கு பரந்த மனசா வளர்க்க வேண்டியது என் கடமை...''

விநாயகம், தங்கையைக் கூட சமாதானப்படுத்தி விட்டார்.

ஜம்புலிங்கம் லேசில் மசியவில்லை.

''வேண்டாம் சார். சொத்துக்கு ஆசைப்பட்டு நான், உங்க தங்கையைக் கல்யாணம் செஞ்சுகட்டதா ஊர் தூற்றும். ஊர் இருக்கட்டும், நாளைக்கு - ...க மறுமகனே சொல்லுவான். மேலும்... எனக்குவேற ஒரு பிள்ளை ...க்கான்.''

''அந்த சொத்துக்கு ஆசைப்பட்டிருந்தா - இத்தனை நாள் - நீ எங்கேயோ இருந்திருப்பே ஜம்பு. எனக்கு உன்னைத் தெரியும். உனக்கு இந்தக் குடும்பத்தைப் பத்தி நல்லாத் தெரியும். அப்புறம் என்ன...''

...மாதக் கணக்கில் யோசித்து - கடைசியில் ஜம்புலிங்கம் - விநாயகத்திடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தார்.

''என்ன ஜம்பு இது?''

''என்னோட கைப்பட எழுதின உயில்... நாளைக்கு என் மகன் வளர்ந்த ...பிறகு - இந்த சொத்து சுகத்துல தனக்கும் பங்கு உண்டுன்னு பிரச்னைய ...ளைப்பக்கூடாது பாருங்க. அதனால - என்னோட சொத்து, மாசம் ...பத்தாயிரம் ரூபாய் சம்பளத்துல நான் சேமிச்சு வைக்கற ...தொகைதான்னும், அதைத் தவிர ஒரு நயாபைசா கூட, அவன் - இங்கேயிருந்து எடுக்கக் கூடாது; எடுக்க நினைக்கக் கூடாதுன்னும் எழுதி ...வச்சிருக்கேன்.''

''அடடா... உன் மகனுக்கு இந்த வீட்டுல இடமில்லையா ஜம்பு? நீ, ...ஜோதீஷ்வை உன் மகனா நினைச்சு வளர்க்கறப்ப, ஜகதா - உன் பிள்ளைய, ...ன் பிள்ளையா நினைச்சு வளர்க்க மாட்டாளா...''

''தாராளமா வளர்க்கலாம். ஆனா, என் மகனுக்கு - பிற்காலத்துல - ...இந்த சொத்து மேல ஆசை வந்துடக் கூடாது... என் ரெண்டு கண்ணா ...நினைச்சு இவங்களை நான் வளர்க்கப் போக - ரெண்டு கண்ணுமே - ...ண்ணை ஒண்ணு குத்திக்க முயற்சிக்கக் கூடாது... இதுக்கு நீங்க ...ம்மதிச்சாத்தான் - உங்க தங்கைய நான் கல்யாணம் செஞ்சுப்பேன்!''

அன்று -

ஜம்புலிங்கம் இப்படிச் சொன்னதை - இப்பொழுது நினைத்தாலும் ...மெய் சிலிர்க்கும் விநாயகத்துக்கு.

ஜகதாவும், ஜம்புலிங்கமும் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்து - ...இன்றைக்கு இருபத்திரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது.

பிருத்வியை - பதினைந்து வயசு வரையில் வீட்டுக்கு அழைத்து ...ரவேயில்லை ஜம்புலிங்கம்.

''எனக்கு ஒரு தம்பி இருக்கறதா சொல்லுவீங்களே... அவனை நான் ...ப்பப் பார்க்கறது..?''

இப்படி ஜோதீஷ்வரும்-

''இது ரொம்ப அநியாயம்ங்க. என் குழந்தைக்கு ஒரு அப்பா கிடைச்ச ...மாதிரி, உங்க குழந்தைக்கு ஒரு அம்மாவா நான் இருக்கறதை நீங்க ஏன் ...டுக்கறீங்க? என்மேல நம்பிக்கை இல்லையின்னுதானே அர்த்தம்...''

இப்படி ஜகதாவும் - தினம் புலம்பி, ஜம்புலிங்கமும் 'இதோ - அதோ' என்று நாட்களைக் கடத்திவிட்டு பிறகு ஒரு நாள் அழைத்து வந்தார்.

பிருத்வி - ரொம்ப அடக்கமான பிள்ளை.

'இதுதான் உங்க அம்மா!'

இப்படி, ஜம்புலிங்கம், ஜகதாவை அறிமுகப்படுத்தின உடனேயே - தரையில் விழுந்து கும்பிட்டான்.

சிவப்பாய், மூங்கில் மாதிரி நெடுநெடுவென வளர்ந்திருந்த சிறுவனை அணைத்து உச்சி முகர்ந்தாள் ஜகதா.

''உன்னை என் கண்ணுலேயே காட்டாம - உங்க அப்பா - எத்தனை நாளா ஏமாத்திட்டு இருந்தார் தெரியுமா...''



## அஞ்சறைப் பெட்டி

### பச்சை

நவரத்தினங்களில் ஒன்றான பச்சை மணி பாவங்களைப் போக்கக் கூடியது. பயங்களை நீக்கக் கூடியது. நஞ்சுகளை முறிக்கக் கூடியது.

பிருத்வி, மென்மையாய் சிரித்தான்.

''உங்களையும் அண்ணாவையும் பார்க்கலையின்னா என்ன... உங்களோட கைப்பட வர்ற லெட்டர் எல்லாத்துலேயும்தான் நான் - உங்களைப் பார்க்கறேனே... என் லெட்டர் எல்லாம் ஒழுங்கா கிடைக்கறதா..?''

''ஓ... அது என்ன - எல்லா லெட்டரையும் டைப் அடிச்சு அனுப்பறே..? கையாலே எழுத சாருக்கு நேரமில்லையா..?''

ஜோதீஷ்வர், தனக்கு ஒரு சகா கிடைத்த மகிழ்ச்சியில் கிண்டலில் இறங்கினான்.

''எங்க ஸ்கூல்லே - படிப்போட - கம்ப்யூட்டரும் சொல்லித் தருவாங்க... அதை நான் - பெருமையா வெளியில சொல்லிக்கறது எப்படி...?''

பிருத்வியும் சளைக்காமல் பதிலளித்தான்.

''ஜோதீஷ்... நீ நிறைய படிச்சு - இந்த பிஸினஸ் எல்லாத்தையும் பார்த்துக்கறப்ப - உன் தம்பி பிருத்வி - உனக்கு ஏத்த பர்ஸனல் செகரட்டரியா இருப்பான் - என்னை மாதிரி...''

இப்படிச் சொன்ன ஜம்புலிங்கத்தை - ஜகதா, தனியே அழைத்துப் போய் கண்டித்தாள்.

''குழந்தைங்க கிட்ட என்ன பேசறதுன்னே இல்லையா?''

''ஏன் ஜகதா?''

''பிருத்வி ஒரு பி.ஏ.வாகத்தான் ஆகணுமா? அவனும் நல்லாப் படிச்சு - பெரிய பிஸினஸ் பண்ணக் கூடாதா?''

''அவன் சாமர்த்தியம் எப்படியோ - அப்படி. ஆனா - ஓசியில ஓமம் வளர்க்க நான் விடமாட்டேன் ஜகதா. உழைச்சாத்தான் உயர்வுங்கறதை அவன் மனசுல பதியற மாதிரி, நான் அடிக்கடி சொல்லிட்டேத்தான் இருப்பேன்...''

''இதே வார்த்தைய ஜோதீஷ் மண்டையிலயும் உறைக்கற மாதிரி சொல்லுங்களேன். அவனுக்கு நீங்க ரொம்ப இடம் கொடுத்திட்டீங்க...''

''இல்லே ஜகதா.. என்னதான் மகன்கற உரிமையோட நான் அவன் கிட்ட பழகினாலும் - அவன், என் எஜமானரோட மகன்கற மதிப்பு - குறுக்கே மதில் சுவரா நிற்குது. அதான், அவனை அடிக்கப் போற கை - அணைக்கறேன்கறது...''.

''எங்க அண்ணாவை மட்டும் வா, போ - ன்னு பேசத் தொடங் கலையா.''

''அது ஒரே வயசு. சிநேகம். நாளைக்கு நம்ம குழந்தைங்களும் 'அடா, புடா' போட்டுத்தானே பழகப் போறாங்க.''

இப்படி எத்தனையோ ஆறுதல் சொல்லியிருக்கிறார் ஜம்புலிங்கம். இருந்தும் மகன்களை வளர்ப்பதில் பாரபட்சம்தான்.

ஜகதாவின் மகன் படிப்புக்காக ஃபாரின் சென்று அங்கேயே தங்கி, எவளோ ஒரு வெளிநாட்டுக்காரியை மணந்து விட்டதாக தந்தி கூட வந்துவிட்டது... டெலிபோனில் அவன் பேசியபோது கூட, 'என்னடா கண்ணா இப்படிப் பண்ணிட்டே? உனக்காகவே பொண்ணைப் பெத்து வச்சிருக்கிற உன் மாமாவுக்கு நான் என்ன பதிலைச் சொல்லுவேன்?' - என்று கண் கலங்கக் கூறினாரே தவிர - ஜகதாதான் நெற்றி நரம்பு புடைக்கக் கத்தினாள்.

''டேய்! நீ உருப்பட மாட்டே. பெத்தவங்க சொல்லைக் கேட்காம, இப்படி எவளையோ கல்யாணம் பண்ணிக்கிட்டதோட பலனை சீக்கிரமா அனுபவிப்பே பாரு.''

ஜம்புலிங்கம், ரிஸீவரைப் பிடுங்கி அதன் இடத்தில் வைத்து விட்டு முறைத்தார்.

''மனசுல என்ன, ரிஷி பத்தினியின்னு நினைப்போ?''

''ஏன்?''

''பின்னே என்ன, கல்யாணம் கட்டிட்டேன்னு சொன்னா 'சந்தோஷம்'னு ஒரு வார்த்த சொன்னா போதாதா? உனக்கு இதுல சந்தோஷமில்லையின்னு அவனுக்குத் தெரியாதாங்காட்டியும். சாபம் கொடுக்கற? இப்ப உங்க அண்ணன் வருவான். அவனுக்கு என்ன பதிலை சொல்றதுன்னு யோசிப்பியா... அதை விட்டுட்டு கிய்யா முய்யா-ன்னு கத்தறா.''

ஜோதீஷ்வரின் முடிவு விநாயகத்தை பெரிதும் பாதித்ததுதான். அப்பொழுதுதான் ஜகதா இந்த யோசனையைச் சொன்னாள்.

''பிருத்வியும் என் மகன்தான் அண்ணா. இன்னும் பார்க்கப் போனா - என் வார்த்தைய விளையாட்டுக்காகக்கூட அவன் மீறினதில்லை.''

இப்பொழுதும் ஜம்புலிங்கம் குறுக்கே விழாத குறையாக மறித்தார்.

''விநாயகம், பொம்பிளைங்க எப்பவுமே ஆன் தி ஸ்பாட் முடிவெடுப்பாங்க. அது தப்பு. பிருத்விக்கு இப்பத்தான் பத்தாயிரம் ரூபா சம்பளம் கிடைக்குது. உன் பொண்ணுக்கு சோப்பு வாங்கக் காணுமா அது? எதுக்கும் கொஞ்சம் பொறுமையா இருந்தா - ஜோதிஷ்ஷே திருந்தி வருவான்...''

''மூச்!!''

அபர்ணா, மூக்கின் மீது விரலை வைத்தாள்.

''நான் எல்லாத்துலேயும் முதலா இருக்கத்தான் ஆசைப் படறேன் மாமா...''

ஜம்புலிங்கம் கலகலவெனச் சிரித்தார்.

''இப்ப உங்க அத்தை - எனக்கு ரெண்டாவது பெண்டாட்டி. அவளுக்கு நான் - ரெண்டாவது, புருஷன். என்ன குறைஞ்சு போயிட்டோம்?''

''இது மாதிரி எல்லாருக்கும் அமையாது.''

எது எப்படியோ...

பத்து நாட்கள் மண்டையைப் போட்டுக் குழப்பி கடைசியில் அபர்ணா - பிருத்வி கல்யாணம் நடந்தே விட்டது.

ஒரு ஹனிமூனுக்கே இத்தனை அழுகிற அப்பா - எப்படி, தான் கணவரோடு டெல்லி மும்பை எல்லாம் சென்றால் சகித்துக் கொண்டிருக்கப் போகிறார் என்கிற கவலை அபர்ணாவுக்கு...

முன் ஸீட்டில் கையகல டேப்ரிகார்டர்.

பிருத்விக்கு பாட்டு என்றால் கொள்ளை ஆசை.


அபர்ணா ஏறி அமர்ந்ததுமே, வேலையாள் ஒரு சின்ன ஃபிளாஸ்க்கை கொண்டு வந்து அவளிடம் தருகிறான்.

''இது என்ன?''

''மேல போகப் போகக் குளுரும். சூடா ஏதாச்சும் சாப்பிடணும் போல இருக்கும். வெறும் பாலுதான்...''

கார் - ஸ்டேஜில் ஆடப் போகிற காபரேக்காரி மாதிரி நாசுக்காக பின் பக்கத்தைக் குலுக்கி, செல்ல முனகலுடன் புறப்படுகிறது.

அன்றிரவு நிகழப் போகும் விபத்து புரியாமல் அனைவரும் முட்டாள்தனமாய் கையாட்டுகிறார்கள்!




**ப**டுக்கையில் மூட்டை கட்டிக் கொண்டு தூங்கும் ஆனந்தைக் கண்டதும் நாணாவுக்கு பொல்லாத கோபம் வந்து விட்டது.

''இவனுக்கெல்லாம் அலாரமெல்லாம் போதாது... இதோ வர்றேன்...''

உள்ளே போய் ஒரு எவர்சில்வர் தட்டையும் கரண்டியையும் எடுத்து வருகிறான்.

''ணக ணக ணக...''

ஊஹூம். அசைவில்லை. மறுபடியும் பலத்த சத்தம்... ஒரு சின்னப் ...ாளல் இருக்க வேண்டுமே...

நாராயணனுக்கு பயமாய் போய் விட்டது.

இதே ஆனந்த்தான் முதல் நாள் - தனக்கு இந்தப் படிப்பு சுத்தமாய்ப் பிடிக்கவில்லை என்றும் - அம்மா இதற்கு மேலும் வற்புறுத்தினால் ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து சாக வேண்டியதுதான் என்றும் புலம்பிக் கொண்டிருந்தான்.

'ஒருவேளை அந்தமாதிரி ஏடாகூடமா ஏதாவது செஞ்சு ...ட்டானோ...'

'ஆஞ்சனேயரப்பா... இது என்ன சோதனை...'

அவன், தன் கையிலிருந்த கரண்டியினால் மூட்டையில் கை, கால் ...ங்கேயிருக்கும் என்பதை ஒருவாறாகத் தீர்மானித்து 'கிச்சு கிச்சு' ...ட்டினான்.

மூட்டை மெத்தனமாய், உணர்ச்சியே இல்லாத ஜடமாய் இருந்தது.

''ஆனந்த்... ஆனந்து... எங்கேப்பா போயிட்டே... ஏற்கனவே உங்க ...ம்மாவுக்கு என்ன பதிலைச் சொல்றதுன்னு முழிச்சிட்டிருக்கேன்... ...ண்ணா...''

அவன் அலறலுக்கு பதில் குரல், வீட்டின் பின்புறத்திலிருந்து ...ருகிறது.

''ஒப்பாரி வைக்காதேடா நாணா... இங்கே வந்து பாரு... கோழி ...ாட்டுக்கு குஞ்சுங்களைப் பத்தி கவலையேபடாம, என்னா ஒரு ...தில்'லா நடக்குது பாரு... எங்கம்மாவும் இருக்காளே..! ஒரு தம்ளர் ...ண்ணியைக் கூட சுயமா எடுத்துக் குடிக்க விடாம... எப்பவும் உன்னை ...ன் பின்னாலேயே காவல் காக்க வச்சிட்டு... ஏண்டா, உனக்குப் ...பண்டாட்டியை பார்க்கணும் போலவே இல்லையா?''

பல் துலக்கியபடி ஆனந்த், நாராயணனைப் பார்த்து, குறும்பாகக் கண் ...மிட்டுகிறான்.

அவனுக்குத் தெரியும் - எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினால் ...திராளி உருகி விடுவான் என்று...

அம்மாவிடம் அவளது பால்யத்தைப் பற்றிப் பேச வேண்டும். ...ப்பாவும் அவளும் கல்யாணம் பண்ணிய புதுசில், எப்படியெப்படி ...ல்லாம் இருந்தார்கள் என்று பேச வேண்டும். பிரசவத்தில் போது

அவள் என்ன புடவை கட்டிக் கொண்டிருந்தாள்... துணைக்கு யார் யார் 'வந்தார்கள் என்று கேட்க வேண்டும்.

அப்பாவிடம் - அவரது வம்சத்தைப் பற்றிக் கேட்க வேண்டும். முப்பாட்டனார் - யாரோ பிச்சை கேட்டு வந்தவர்க்கு, தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த வெள்ளித் தட்டையே தூக்கிக் கொடுத்தாராம். அது பற்றிக் கேட்க வேண்டும். மெடிகல் காலேஜில் வரிசையாய் ஏழு தலை முறையும் போட்டோவாக மாட்டியிருக்கிறதே - அது பற்றிக் கேட்க வேண்டும்.

## கோமேதகம்

**ப**சுவின் சிறுநீர் நிறமும், பளபளப்பும் உடைய கோமேதகம் நல்ல பலனைக் கொடுக்கும். நிறம் குறைந்த பளபளப்பு இல்லாத கோமேதகம் அணியக் கூடாது. நிறம் குறைந்தது, துன்பம் கொடுக்கும்.

ஆனந்த் ஓரளவுக்கு எல்லாரையும் அளந்துதான் வைத்திருந்தான். யாரிடம் எதைச் சொன்னால் வேலையாகும் என்பது அவனுக்கு அத்துபடி.

இதெல்லாம் தெரிந்து வைத்திருக்கிற குழந்தைக்கு படிப்பு வரவில்லை என்றால் யாராவது நம்புவார்களா... காதுகுத்தல் என்று சொல்லமாட்டார்களா...

ஆனந்த் - பள்ளிக் கூடத்தில் முதலாவதாக வந்தான். பிளஸ் டூவில் முதலோ முதலாவதாக வந்தான்.

கல்லூரியில் சேரும் போதுதான் வந்தது வினை.

கமலா - அவள்தான் ஆனந்தின் தாய் - அந்தக் குடும்பத்தின் எட்டாவது வாரிசும் ஒரு டாக்டராகத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். போதாக் குறைக்கு - இறந்து போன அவள் கணவன் வேறு, 'நம் மகனை ஒரு டாக்டராக்கு' என்று கடைசிக் கட்டளையிட்டு விட்டு இறந்து விட்டார்.

பத்து வயசிலேயே ஆனந்துக்கு, ஸ்பிரிட் நாற்றம் குடலைப் பிடுங்குகிறது என்பான். பிளஸ்-டு வில் தவளையை அறுத்து விட்ட தோஷத்துக்காக, பத்து நாள் உபவாசம் இருந்தான்.

'டாக்டருக்குப் படித்தே தீருவேன்' என்று எத்தனையோ மாணவர்கள் ஒற்றைக் காலில் தவமிருக்க - இவனுடைய முன்னோர்கள் செய்த தவத்தின் பயன் - இவனுக்கு ஏக தடபுடலாய் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது.

முக்கி முனகி இது மூன்றாம் வருஷம்!

ஹியூமன் அனாடமியை அக்கக்காய் புத்தகத்தில் படித்து தெரிந்து கொள்வதை விடவும் - விதவிதமாய் உடையணிந்துவரும்



மாணவிகளைப் பார்த்துத் தெரிந்துகொள்வதே அவனுக்குப் பரமானந்தமாக இருந்தது.

இதற்காகவே, சொந்த ஊரான மதுரையில் மருத்துவக் கல்லூரி இடம் கிடைத்தும், அவன் 'சென்னை' தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து வாங்கி விட்டான்.

கமலாவுக்கு இதுதான் குறை.

''என்னயிருந்தாலும் நான் பக்கத்துல இருந்து சாப்பாடு போடற மாதிரியாகுமாடா?''

''அம்மா... என்னாலே ஒரே சமயத்துல ரெண்டு தொல்லைகளைத் தாங்க முடியாது. நான் டாக்டராகணுமா, வேண்டாமா..?''

''கண்டிப்பா...! குறைஞ்சது ஒரு எம்.டி. இல்லை எம். எஸ். ஸாவது வாங்கணும்டா... அது தான் என் கனவு...''

''உங்களுக்கெல்லாம் - எழவு - கனவுலே வேற எதுவுமே வராதா? ஏறுமாறுன்னா ஒரு எம்.டி. இல்லே எம்.எஸ். இது என்ன வெத்தலைப் பாக்கு கடையில கிடைக்கற பாங்க் எக்ஸாம் அப்ளிகேஷன் ஃபாரமா... காசைக் கொடுத்தா வாங்கிட்டு வர்றதுக்கு..?''

''......''

''இந்தா, அப்படிப் பார்க்காதே. முந்தா நாள் டி.வி.யில் மங்கம்மா சபதம் பார்த்தியே. அம்மான்னா வசுந்தரா தான் அம்மா. பிள்ளைக்கு எத்தனை சுலபமாக ஒரு ஆணையிட்டா - அப்பாவைப் போய் அடிச்சிட்டு வாடான்னு...''

''சிவசிவா.. இதையெல்லாம் கேட்காம உங்கப்பா போயிட்டார். நான் என்ன பாவம் பண்ணினேனோ உன்னை மகனாப் பெத்து...''

''இங்கே பாரு... நான் தான் என் எதிர்காலத்தையே தியாகம் பண்ணி, உன் இஷ்டப்படி மெடிகல் காலேஜ்லே சேர்ந்திருக்கேன் இல்லே? அப்புறம் என்ன..., எங்கேயோ படிச்சு, சர்டிபிகேட்டை வாங்கிட்டு வந்து தந்திடறேன். அது வரைக்கும் மூட்டைப் பூச்சி மாதிரி பிடுங்காதே!''

கமலா அத்தனை சுலபத்தில் மகனை விட்டுவிடக் கூடியவள் இல்லை...

இவன் தடுக்குக்குள் போனால், அவள் கோலத்துக்குள்ளேயே நுழைபவள்.

''நீ எங்கே வேணுமானாப் போய் படி. உன் கூட நாணாவும் வருவான்.''

'திக்' கென்றாகி விட்டது அவனுக்கு.

''நாணாவா... எதுக்கு? அங்கே பெஞ்ச்சுல நான் ஒருத்தன்தான் உட்காரலாம். என்னதான் நம்ம ஃபேமிலிக்கு மெடிகல் காலேஜ்லே வாய்ஸ் இருக்குன்னாலும் - ஒருத்தனுக்கு பணம் கட்டிட்டு ரெண்டு

பேரை இவாகக்குள்ளே எல்லாம் அனுமதிக்க மாட்டாங்க...''
சிரிக்கவில்லை.
கமலா, மகனின் கிண்டலைப் புரிந்து கொண்டாலும்,
''இங்கே இருந்துக்கிட்டு வாரா வாரம் நீ எண்ணெய் தேய்ச்சு
குளிச்சியா, சாப்பாடு ஒழுங்கா சாப்பிட்டியான்னு நான் கவலைப்பட
முடியாது. அதுக்காத்தான் நாணா உன் கூட அடையார் பங்களாவை
எடுத்துக்க. நானும் அப்பப்ப வரப் போக வசதியா இருக்கும்...''
''ஐய்யோ... நான் ஹாஸ்டல்லேயே தங்கி...''
''மூச்! நடையைக் கட்டு...''
நாராயணனைப் பொறுத்த வரையில், சென்னை வாசம் சொர்க்கம்.
இதை விடவும் அம்மாவிடம் சலுகைகளை எதிர்பார்க்க முடியாது
என்பதால், ஆனந்தும் தனிப்பட்ட முறையில் நாணாவை கவனித்துக்
கொண்டான்தான்.
''நாணா... இன்னிக்கு தேவிதியேட்டர்ல என்ன படம் தெரியுமா...''
''என்ன படம்?''
''சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ...''
அவன் பாடிக் காட்டுவான்.
''அட நம்ம வாத்தியார் படம். அந்தப் படத்துல ஜெயலலிதாம்மா
எப்படியிருப்பாங்க தெரியுமா... வெள்ளரிப் பிஞ்சைக் கீத்து
போட்டாப்பலே அந்த சிரிப்பு ஒண்ணே போதுமே...''
''அப்ப ஏன் பேசிட்டு நிக்கறே... மேட்னிக்கு ஓட
வேண்டியதுதானே...''
''சாயந்திரம் நீ வந்தா இட்லி... இன்னிக்கு செவ்வாய்க்
கிழமையில்லே..? நீ இட்லியும் கெட்டிச் சட்னியும் சாப்பிடலைன்னா
அம்மா கோவிச்சுப்பாங்க... செவ்வாய்க்கிழமை இட்லி, புதன் புட்டு
தேங்காப்பால்... வியாழக்கிழமை முருங்கைக் கீரை அடை...
வெள்ளிக்கிழமை இடியாப்பம்...''
''இங்கே பாரு. இது எனக்கு மனப்பாடமே ஆயிடுத்து. நாணா...
எத்தனை நாளைக்குத்தான் நீ எனக்கு செஞ்சிட்டே இருக்கறது. ஒரு
நாளைக்கு ஒரு சேஞ்ச்சுக்காக நான் செய்யறனே. ராத்திரி இட்லி,
வெங்காயச் சட்னி, சாம்பார், தயிர் சோறு... அவ்வளவுதானே? நான்
செஞ்சு வைக்கறேன் போ...''
''ஐயோ! உனக்கு காலேஜ் இல்லியா..?''
''இருக்குப்பா. இன்னிக்குப் பாடமே சமையக்கட்டுலதான். பெரிய
பெரிய டாக்டர்ஸ் எல்லாருமாச் சேர்ந்து - 'வியாதிகள் உருவாறதே
சமையக்கட்டுலே இருந்துதான். அதனால - அதுக்கு மருந்தும்
சமையலறையிலதான் இருக்கு'ன்னு கண்டு பிடிச்சிருக்காங்க..!''

''ஆமாப்பா... அதனாலே நானும் இன்னும் ரெண்டு
கிளாஸ்மேட்டுமா சேர்ந்து, படிச்சதை எல்லாம் டெமான்ஸ்டிரேட்
பண்ணிப் பார்க்கிறோம்.''
''அது என்ன டிரேட்..?''
''டெமான்ஸ்டிரேட்! ஏன்..!''
''என்னவோ, வாயிலேயே நுழையலே... அதையெல்லாம்
பண்ணிட்டு கடைசியில இட்லி பண்ண மறந்திடாதே... வெங்காய
சட்னி... சின்ன வெங்காயத்துலதான் செய்யணும். அதுதான் உடம்புக்கு
குளிர்ச்சி...''
''அம்மா சொல்லியிருக்கா இல்லே?''
''ஆமா...''
''இந்த அம்மாவுக்குத்தான் எத்தனை மூளை பாரேன். கல்யாணமாகி
வந்த புதுசுல பாட்டி சொன்னாளாம், 'கமலா, சின்ன வெங்காயத்துல
இருக்கற குளிர்ச்சி, வேற எதுலேயுமே கிடையாது'ன்னு... அதை
கெட்டியாப் பிடிச்சிட்டாங்க.. பக்கத்துல இருக்கற
கொடைக்கானலுக்குப் போகலாம் வா - ன்னு அப்பா கூப்பிட்டாக் கூடப்
போக மாட்டாங்களாம்... ஒரு படி சின்ன வெங்காயத்தை தரையில்
கொட்டி, அது மேலே பாய்போட்டு-''
நாணா இப்பொழுதுதான் இவனது கிண்டலைப் புரிந்து கொள்வான்.
வயதில் பெரியவனானதாலும், அந்தக் குடும்பத்தில் வெகு நாட்களாக
இருப்பதாலும், ஆனந்திடம் உரிமை எடுத்துக் கொண்டு 'அடா புடா'
என்று கூடச் சொல்லுவான்.
''டேய்... அம்மாவை வாரறே இல்லே?''
''தெரியுதில்லே? மேட்னிக்கு ஓடுடா-ன்னா ஏன்டா சுத்திச் சுத்தி வந்து
நிக்கறே? சாயந்திரம் ஏழரைக்குக் குறைஞ்சு வீட்டுப் பக்கம் வராதே...''
''இட்லி, வெங்காயச் சட்னி...''
''கண்டிப்பா நான் உனக்காகப் பண்ணி வைக்கிறேன்டா. நீ இடத்தைக்
காலி செய்யேன்...''
''என்னை இத்தனை அவசரமா வெளியில துரத்திட்டு அய்யா என்ன
செய்யப் போறீங்களாம்..?''
''செமத்தியா மூணு ரவுண்டு தூங்கப் போறேன்... பாடமா
நடத்தறாங்க... ஏதாவது சொல்லப் போனா - பொணத்த வெட்டினியா,
குடலை அறுத்தியாங்கறாங்க... ச்சே! சுத்த விவரம் கெட்ட படிப்புப்பா
இது...''
''ஐயோ... பொணத்தை நீ எதுக்கு வெட்டணும்? குடலை அறுக்கத்
தான் வேற ஆளில்லையா... கசாப்புக் கடையா வைக்கப் போறே நீ?''
நாணா அவனைக் கட்டிக் கொண்டு தேறுதல் சொல்வான். வேட்டி
மடிப்பிலுள்ள விபூதிப் பொட்டலத்தைப் பிரித்து, ஏதோ உச்சரித்து
அவன் நெற்றியில் பூசுவான்.

அது போதும் ஆனந்துக்கு... அவனைக் கட்டிப் பிடித்து ஒரு பாட்டம் அழுது விட்டுத்தான் ஓய்வான்.

அப்பேர்ப்பட்ட ஆனந்த் - பரீட்சை சமயத்தில் சென்னையில் இருக்க வேண்டியவன் - என்னென்னவோ ஜகஜ்ஜாலப் புரட்டு எல்லாம் செய்து - கொடைக்கானலில் வந்து முகாமிட்டிருக்கிறான்.

குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போகும் பாதையில் அருமையான பங்களா - அவனுக்கு சொந்தமானது - இருக்கிறது.

போனால் - மதுரையிலுள்ள அம்மாவுக்கு செய்தி போய்விடும்.

''இங்கே பாரு... பீடிக்கு நெருப்பு கேட்டேன்னு நீ அங்க போனதாத் தெரிஞ்சது...''

''சத்தியமா மாட்டேன்.. ஆனாலும் இத்தனை தூரம் வந்துட்டு அம்மாவைப் பார்க்காம திரும்பறதுன்னா...''

''அதெல்லாம் கிடையாது. உனக்கு மதுரையில - மேல மாசி வீதியில ஒரு கண். அதான் இப்படி அடிச்சிக்கறே...''

''ஐயய்யோ... நாப்பது வயசுக்கு நான் உன் கிட்ட இந்த மாதிரிப் பேச்செல்லாம் கேட்கணுமா...''

சைக்கிளின் பின்னால் உயிரைக் ணகயில் பிடித்தபடி வரும் நாணாவுக்கு, அழமாட்டாத குறை...

''நேத்து ராத்திரி தானே வந்தோம். காலையில் காபிதான் ஆச்சு. டிபன் கூட ஆகலே. சமையலுக்கு ஒண்ணும் வாங்கலே... அதுக்குள்ளே வாடகை சைக்கிள் பிடிச்சு, பரபரன்னு கீழே எங்கே போயாறது?''

''பெரிய குளம் வரைக்கும். அங்கே ஒரு கடையில இந்த நேரத்துக்கு முட்டை தோசையும், டீயும் பிரமாதமா இருக்கும். வர்றச்சே ஒரு பலாப் பழம் வாங்கித் தர்றேன். மேல மாசி வீதிய நினைச்சிட்டே தூக்கிட்டு வர்றியா...''

நாணா, வாயைத் திறந்தால் புகை புகையாய் பனிதான் வருகிறது.

''உன் உடம்பு மட்டும் எப்படி எல்லாத்துக்கும் சரிப்பட்டு வருது..?''

நாணாவின் கேள்விக்கு. ஆனந்த சிரிக்கிறான்.

திங்கள் - பொங்கல் வடை, செவ்வாய் இட்லி, புதன் புட்டு - இப்படி

**அதிசயப் பெட்டி**

## முத்து

**சி**ப்பியில் இருந்து பெறப்படும் முத்துக்கள் ஆலங்கட்டியின் நிறம். புறா முட்டையின் திடம். நல்ல ஒளி உள்ளவையாக இருக்கும். இந்த முத்தை அணிந்தால் பாவங்கள் கழிந்து விடும்.



சாப்பிட்டதுக்கு இது கூட-

அவன் வார்த்தையை முடிக்கவில்லை... விழிகள் அதலபாதாளத்தில் நிலைகுத்துகிறது...

அது என்ன கறுப்பாய்... திட்டாய்... சற்றுத் தொலைவில் குழந்தை வீசியெறிந்த பிளாஸ்டிக் பொம்மை போல...

அவன் அப்படியே நிற்கிறான்.




ஆரம்பத்தில் பிரயாணம் சுகமாய்த்தான் இருந்தது. பிருத்வி, ஓரக்கண்ணால் அபர்ணாவைப் பார்த்தபடிதான் வண்டியைச் செலுத்தினான்.

புதுசாய் பூத்த செம்பருத்தி பூப் போல இருந்தாள் அவள்.

சின்ன வயசிலிருந்தே பார்த்து வரும் உருவம்தான் என்றாலும் - தாலி கட்டின சோபையோடு அந்த இருபது வயசு, என்ன பேசுவது என்றே தெரியாமல் தவிப்பது ரசனைக்குரியதாகத்தான் இருந்தது...

இருந்தாலும் பிருத்விக்கு இது முக்கியமில்லை. அவன் இலக்கு வேறு...

தலையைச் சிலுப்பி, சபலத்தை உதறி எறிகிறான் அவன்...

''அபர்ணா... என்ன பேச மாட்டேங்கறே..? குளிர்றதா..? ஷால் எடுத்துப் போர்த்தட்டுமா..?''

''உம்... ஊஹூம்...''

அவள் இரண்டும் கெட்டானாய் முனகினாள்.

பிருத்வி, காரை ஒரு ஓரமாய் நிறுத்தி, அவளது முதுகை மூடினாற் போல ஒரு சால்வையை எடுத்துப் போர்த்தி விட்டான். கார் கதவின் கண்ணாடிகளை ஏற்றி விட்டான். ''சூடா பால் சாப்பிடறியா..?''

''இப்பவே எதுக்கு... இப்பத்தானே பெரிய குளமே வந்திருக்கோம். இப்ப எதைச் சாப்பிட்டாலும் வயித்தைப் புரட்டும்.''

''அதுதான் தப்பு... வயிறு புடைக்க தின்னுட்டுத்தான் மலையேறக் கூடாதே தவிர - கொஞ்சமா ஏதாவது குடிக்கலாம். நாங்கன்னா - சின்னதா ஒரு குவாட்டர் விஸ்கி சாப்பிடுவோம். குளுருக்கு இதமா இருக்கும்...''

அபர்ணா, பெரிய கண்களில் மிரட்சி பொங்க அவனைப் பார்த்தாள். அவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

''நீங்க... குடிப்பீங்களா..?''

''சேச்சே... எப்பவாவது அப்பாவோட பார்ட்டிக்குப் போறப்ப, மரியாதைக்காகத் தொட்டு வச்சிடறதோட சரி. எனக்கு எப்பவுமே

டிரிங்ஸ்னா அலர்ஜி...''

அவன் ஃப்ளாஸ்கிலிருந்து பாலை எடுத்து, அவளிடம் நீட்டினான்...

''தேனிலவை ஆரம்பிக்கறோம். இது என்னோட முதல் வேண்டுகோள். நீ குடிச்சா, உனக்கு என்னை மனப்பூர்வமாகப் பிடிச்சுருக்குன்னு அர்த்தம்.... வேண்டாம்னா - அது, என்னையே நிராகரிக்கறாப்பலே...''

அபர்ணா ஒரு விநாடி தயங்கினாள்.

உண்மையிலேயே 'இவன்தான் மாப்பிள்ளை' என்று பத்து நாள் முன்பு வரையில் தெரியாது. அது வரைக்கும் - அமெரிக்காவில் உள்ள ஜோதீஷ்வர்தான் அவளது புருஷன் என்று அவள் அப்பாவிலிருந்து வீட்டில் சுவரோரமாய் போகிற கட்டெறும்பு வரையில் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

ஜோதீஷை அவள் அந்த வயசுக்கே உரிய ஆசையுடன் நினைத்துப் பார்த்ததில்லை. எங்கே... படிப்பு, பாட்டு, நடனம் இதற்கே இருபத்தி நாலு மணி நேரம் போதவில்லை.

ஒருநாள் விநாயகம் வந்தார். தங்கை மகளை வாயில் வந்தபடி கத்தினார்:

''அமெரிக்க பொம்பளையக் கட்டிட்டிருக்கானாம். மேதாவி. நாளைக்கே அவ, இவன் குடலை உருவி, மாலையாப் போட்டுக்கப் போறா... பார்த்துட்டே இரு... நீ எதுக்காகவும் வருத்தப்படாதே கண்ணு. கடவுள் எல்லாத்தையும் ஒரு நல்லதுக்காகத்தான் செய்வார். நாமதான் மட ஜென்மம். புரிஞ்சுக்காம திண்டாடறோம்.''

இதற்குப் பின் ஒருநாள் ஜகதா, இவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று வைத்துக் கொண்டு பிருத்வியைப் போல தங்கமான பிள்ளை இல்லை என்றும், அவனை மணப்பதினால் தன் உள்ளம் இரட்டிப்பு சந்தோஷமடையும் என்றும், இன்னமும் அந்தப் போக்கற்ற பிள்ளையை நம்பிக் கொண்டிருக்க வேண்டாம் என்றும் கதை கதையாய் சொன்னாள்.

அபர்ணாவுக்கு அத்தையிடம் உயிர். அவள் அழுதால் பொறுக்கமாட்டாள்.

இப்பொழுதும் அதே கருத்தோடு சம்மதித்து விட்டாள்.

பிருத்வி கேட்டது சரிதானே!

'எங்கே தான் இன்னமும் ஜோதீஷ்வரையே நினைத்துக் கொண்டிருப்பதாக இவர் நினைத்து விட்டால்...'

'ஐயோ... அது பெரிய தப்பாச்சே!'

அவள், பாலை 'மடக்'கெனக் குடித்து விட்டு தம்ளரை அவன் புறம் நீட்டினாள். 'நீங்களும் குடிங்க' என்றோ, 'நீங்க குடிச்சாத்தான் என் மேல உங்களுக்குப் பிரியம்' - என்றோ, அனாவசியக் கொஞ்சல் எல்லாம்



அவளுக்குத் தெரியவில்லை.

காரை ஸ்டார்ட் செய்த பிருத்வி, பக்கத்திலேயே இருந்த டேப் ரிகார்டரை எடுத்து, இருவருக்கும் நடுவில் வைக்கிறான். பொத்தானை அழுத்த - டேப் சுழலத் தொடங்குகிறது.

''அபர்ணா...''

''உம்?''

''ஹனிமூனுக்குப் போறப்ப நாம என்ன பேசிகிட்டோம்கறதை நாற்பது வருஷம் கழிச்சு நினைச்சுப் பார்த்தாலும் - டேப்பை போட்டு கேட்கணும். நம்ம குழந்தைங்க எல்லாம் கேட்டு கேலி செய்யணும்னு ஆசை. அதுக்காகத்தான் இந்த டேப் ரிகார்டர்...''

''..............''

''ஏதாவது பேசு அபர்ணா... டேப் வீணா சுத்துது பார்...''

''எ..எ... என்னத்தைப் பேச...''

''சரியாப் போச்சு போ. மாமா வீட்டுல உன்னைப் பார்த்திருக்கேனே.. வாயடியும் கையடியுமா... இப்பப் பேசினா என்ன...''

''எனக்கு வெட்கமாயிருக்குதுங்க... பேச்சே வரல்லே...''

''முதல்லே அப்படித்தான் இருக்கும். போகப் போக சரியாப் போயிடும். ஆமா, உனக்கு சமைக்கத் தெரியுமோ..?''

''எங்கே... இனிமேத்தான் கத்துக்கணும்...''

''கவலையே படாதே... உன் செல்ல அத்தை - உன் நக நுனியில கூட அழுக்குப் பட விடமாட்டாங்க...''

''இருந்தாலும் என் கையாலே சமைச்சு, உங்களுக்குப் போடணும்கற ஆசையெல்லாம் எனக்கு இருக்காதா?''

''அடி சக்கை! உனக்கு அந்த ஆசையெல்லாம் கூட இருக்குதா... கடவுளே... பிழைச்சேன். ஒரு நாளைக்கு அம்மாவைக் கேட்டுட்டு முட்டை குருமா செய்... அம்மாவோட கை மணம் உனக்கும் வருதான்னு பார்க்கறேன்... உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா.... அம்மா கைச் சாப்பாட்டை விட்டுட்டு வேற எங்கேயும் போய் சாப்பிடப் பிடிக்காததாலே தான் - நான் இந்தியாவுக்குள்ளேயே ரவுண்ட் அடிச்சிட்டிருக்கேன். நினைச்சா ஓடி வந்து அம்மாவைப் பார்க்கலாமில்லே...''

''.......''

''என்ன, நான் பேசிட்டே இருக்கேன்... நீ சைலண்ட்டாயிட்டே?''

''சொல்லுங்க...''

''இங்கே பாரு... அபர்ணா, தூக்கம் வர்றதா... ஜில்லுனு தண்ணி தர்றேன். முகத்துல அடிச்சிக்க. என்ன நீ இவ்வளவு தூங்கு மூஞ்சியா இருக்கே... கண்ணம்மா... டிரைவர் சீட்டுக்குப் பக்கத்துல உட்கார்ந்து தூங்கக்கூடாது... தூக்கம் ஒரு தொத்து வியாதி... என்னையும்

தொத்திகிச்சன்னா அம்பேல்... அவ்வளவுதான்...''

''..........''

''அபர்ணா... அபர்ணா... சரியாப் போச்சு....''

''உம்......கூப்பிட்டீங்களா..?''

''அப்பாடி... நல்லா நிமிர்ந்து உட்காரு பார்க்கலாம். இப்படி மடியில சாய்ஞ்சா, ஸ்டீயரிங் எல்லாம் துச்சமாப் போயிடறது எனக்கு...''

''ஸாரி...''



## அஞ்சறைப் பெட்டி

### வைரம்

**ஆ**ண், பெண், திருநங்கை என மூன்று வகை பிரிவு உள்ளது. முதல் இரண்டும் அணியக் கூடியது. கரும் புள்ளி, காற்றுக்குமிழ், கீறல் உள்ளதை அணியக் கூடாது. வைரத்தின் அடையாளம் ஐந்து. 6 கோணங்கள், கனம் இல்லாமல், சம வடிவமைப்பில் எட்டுத் தளமாகவும் முனை கூர்மை யாகவும் இருக்க வேண்டும்.

''அதையும் தூக்கி மேல போடு... இன்னும் கொஞ்சம் சூடா பால் குடிக்கிறியா..?''

''சரி...''

அவன் தருகிறான். உதட்டு விளிம்பில் படர்ந்திருந்த பாலை நாசூக்காய் துடைத்து விடுகிறான்...

''இப்ப நிமிர்ந்து உட்காரு... 'ஜம்'ன்னு என் தோள் மேல கையைப் போட்டுக்க. உன்கூடப் பேசிட்டே வாணும்னு நான் எத்தனை ஆசையா எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்கேன்.. ஆமா, உனக்கு என்ன கலர் பிடிக்கும் அபர்ணா..?''

''நீலம்...''

''அப்ப ஏன் சிவப்புல டிரஸ் கட்டியிருக்கே?''

''உங்களுக்கு சிவப்பு கலர்தான்... என்னங்க... நான் இப்படி தலையை சாய்ச்சிட்டே வர்றேனே... தூங்க மாட்டேன். ரெண்டு நாளா கல்யாண கலாட்டாவுல தூங்கக் கூட...ர்...ர்...ர்...''

''அடடா... என்ன இப்படி சாயறா... அம்மாடி... எனக்கும் அலுப்பாகத் தான் இருக்கு... டிரைவரை அழைச்சிட்டு வரவும் மனசில்லே... ஏய்... இங்கே பாரு... எனக்கும் கண்ணை சுத்துது... வாட்டர்பாட்டில்லே இருந்து தண்ணி...''

அவன் மெள்ளத் திரும்பிப் பார்க்கிறான்.

அபர்ணா கவர்ச்சிகரமாய் தூங்கிக் கொண்டிருக்கிறாள். சின்ன செப்பு வாய், மாதுளை மொட்டு போலக் குவிந்திருந்தது.

அவன், காரை மெள்ள நிறுத்தினான்.

விருட்டென இறங்கி காரின் டிக்கியைத் திறக்கிறான் அவன்.

கயிறு போட்டு கட்டி வைக்கப் பட்டிருந்த - நினைவிழந்த அல்லது இறந்து போன மனிதனை - சிரமப்பட்டு தீரதரவென முன் ஸீட்டுக்கு



இழுத்து வருகிறான்.

சொல்லி வைத்தாற் போல அந்த மனிதனும் ரோஜா நிற பைஜாமா குர்த்தா...

டிரைவிங் ஸீட்டில் உட்கார வைத்தவன், காரை மெள்ளத் தள்ளி முன் சக்கரங்கள் இரண்டும் அந்தரத்தில் தொத்தி நிற்பது போல - அந்தக் கொண்டை ஊசி வளைவில் நிறுத்தி விட்டு தனது ப்ரீஃப் கேஸை மட்டும் பத்திரமாக எடுத்துக் கொண்டு - மலைச் சரிவில் யூகலிப்டஸ் மரப் பின்னணியில் ஒதுங்கி, ஒளிந்து நிற்கிறான்.

அவன் எதிர்பார்த்தது பத்தே நிமிஷத்தில் நடந்து விட்டது...

ராட்சஸ வேகமாய் வந்து, பிடிவாதக்காரக் குழந்தை போல - வேகத்தைக் குறைக்காமலேயே திரும்பிய லாரிக்காரன் காரின் பின் விளிம்பை இடிக்க-

இடி ஒன்றும் பிரமாதமில்லை...

கேரம் போர்டில் கெட்டிக்கார ஆட்டக்காரரின் ஸ்ட்ரைக்கர் வழுக்கியவாறு சிவப்புக்காயை பாக்கெட்டில் தள்ளுவது போல - அந்த சிவப்புக் கார் - இருட்டுப் பாக்கெட்டுக்குள் எங்கோ... எங்கோ போய் விழுகிறது.

பிருத்வி, லாரிக்காரனின் திகிலை ரசித்தபடி சிகரெட்டுக்கு உயிர் கொடுக்கிறான்.



''**எ**வ்வளவு கிடைச்சது?''

லாவண்யா மழலை மாறாத குரலில் கேட்கிறாள்.

''ஸாலிடா இருபது லட்சம் டார்லிங். இதைத் தவிர அப்பா கொடுத்த பத்து லட்சம் தனி. நாம மட்டுமில்லே... நம்ம பேரன் பேத்திங்ககூட ஸ்விட்சர்லாந்துல ஹனிமூன் கொண்டாடலாம்.''

பிருத்வி - சாட்சாட் பிருத்வி - ஹைதராபாத் ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் - லாவண்யாவின் மடியில் தலை வைத்துப் படுத்தபடி சொல்கிறான்.

லாவண்யாவுக்கு முப்பது லட்சம் ஒன்றும் அத்தனைபெரிய விஷயமாகத் தோன்றவில்லை போல. ஆரஞ்சு சுளை உதடுகளை அழகாகப் பிதுக்கினாள்.

''பதினைஞ்சு லட்சம் ஒரு பெரிய தொகையா?''

''இல்லையா பின்னே...? ஒரு வேலையும் செய்யாம, சாப்பிட்டேன்; தூங்கினேன்; விதவிதமா டிரஸ் பண்ணிட்டேன். அபர்ணா கழுத்துல தாலி கட்டினேன். ஆட்டத்தை நறுவிசா முடிச்சேன். இதுக்குப் பதினஞ்சு

லட்சம் அதிகம்தான்...''

''மக்கு பிருத்வி...''

அவள், அவனது இரு காதுகளையும் பிடித்து அப்படியே செல்லமாய் குலுக்கினாள்.

''நாம இப்ப எந்தக் காலத்துல இருக்கோம்? நமக்குன்னு வசதியா ஒரு வீடு - சென்னைலே வாங்க முடியாது... ஹைதராபாத், கொல்கத்தாவுல வாங்கினாலே முப்பது லட்சம் போதாதே. அப்புறம் பூவாவுக்கு என்ன செய்வீங்க? கொஞ்ச நாளைக்கு வெளியில அதிகமாத் தலையைக் காட்டாதே - யின்னு வேற அந்த மீசைக்காரர் சொல்லியிருக்கார்...''

''ஷ்... சும்மா நீ அவரை மீசைக்காரர், அது, இதுன்னு மரியாதைக் குறைவாப் பேசாதே! ஆமா!''

''பின்னே என்ன... ஜம்புலிங்கம் உன்னைப் பெத்த அப்பனா..? பிருத்வி! இங்கே பாரு... மரத்துல மாங்கா இருக்குன்னு - சுபால்னு யோசிக்காம கல்லெறியறோம் பாரு... அது விளையாட்டுத்தனம். ஆனா, உங்க ஜம்புலிங்கம் இருக்காரே - கில்லாடி... 'செஸ்'லே யோசிச்சு, யோசிச்சு ஒவ்வொரு காயா நகர்த்தறாப்பல - ஜம்பு சார் நகர்த்திட்டிருக்கார். கடைசியில் அவர் கோடிக் கணக்குல அள்ளப் போறார். நாம ரெண்டு பேரும் கட்டை விரலை வாயில வச்சிட்டு - வேடிக்கை பார்க்கப் போறோம். பார்த்துட்டே இரு.''

பிருத்விக்கு திடீரென அலுப்பாக இருக்கிறது. முடிந்தால் பூமி உருண்டையை, 'ச்சீ போ'வென இடது காலால் எட்டி உதைத்து விட்டு படுக்கையில் படுத்து சின்னதாய் தூக்கம் போட வேண்டும் போல இருக்கிறது.

ஒரொரு சமயம் யோசித்தால், லாவண்யாவை அதிகம் பேச அனுமதிக்கிறோமோ என்றுகூடக் கவலையாக இருக்கிறது.

ஜம்புலிங்கம் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறார்:

'பணத்துடன் விளையாடு. போனால் மறுபடி சம்பாதிக்கலாம். பெண்ணுடன் விளையாடவே செய்யாதே... பிசாசுகள்... ரத்தத்தை ஒட்டக் குடித்து விட்டுதான் மறுவேலை பார்ப்பார்கள்....'

அப்பொழுது அவர், ஏதோ பெண்களின் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பில் சொல்வது போலத் தோன்றியது.

இப்பொழுது லாவண்யாவைப் பார்க்கும் பொழுது ஜம்புலிங்கத்தின் வாயில் சர்க்கரையை அள்ளித்தான் போட வேண்டும் போல இருக்கிறது.

'முப்பது லட்ச ரூபாயைத் துச்சமாக நினைக்கிறாளே பாவி...'

பிருத்விக்கு அவள் மீது கோபம் வந்தாலும் 'ச்சீ போ'வென வெறுத்து ஒதுக்கிவிட முடியாது. அந்த மாதிரி பழகவில்லையே அவர்கள்... மும்பையில், கௌரவமானவர்கள் கால் வைக்கவும் தயங்கும் சேரியில் பிருத்வி - தன் பெற்றோருடன் வாழ்ந்த போது - லாவண்யா இவனுடன் பள்ளியில் படித்தாள்.

இவனளவுக்கு ஏழ்மை இல்லை. நடுத்தர ரகம். அப்பா இல்லாத குடும்பம். அந்தக் குடும்பத்தில் - எல்லாமே பெண்கள் ராஜ்ஜியமாக இருந்தது, பிருத்விக்கு அப்பொழுது வியப்புக்குரிய விஷயமாக இருந்தது.

பின்னால் - போகப் போகப் புரிந்து கொண்டான்.

'இவளை அடைய வேண்டுமானால் - குறைந்தபட்சம் இவளது அந்தஸ்தையாவது எட்டிப் பிடிக்க வேண்டும்.'

பிருத்விக்கு அம்மா கிடையாது. சித்திதான். சித்திக்கு இவன் மீது அக்கறை கிடையாது. ஆனாலும் - லாவண்யாவின் வீட்டுக்கு வந்து போகும் ஜம்புலிங்கத்தின் மூலமாய் அவனுக்கு அதிருஷ்டம் அடித்தது.

'என் பொண்டாட்டி கிட்ட அழைச்சிட்டுப் போய், உன்னை என் மகனா அறிமுகப் படுத்தப் போறேன். இனிமே நீ என் மகன். பெத்தவங்களை மறந்திடணும். உனக்காக ஒரு ஒளிமயமான எதிர்காலம் காத்திட்டிருக்கு... உனக்கு என்ன வேணுமானாலும் கிடைக்கும்; ஆனா என் சொல்படி நீ நடக்கணும்...''

பதினைந்து வயசுக்கும் விஷய ஞானம் அதிகமில்லாத அவன் கேட்டான்:

''அப்போ, நான் லாவண்யாவைப் பொண்ணு கேட்டா, அவங்க வீட்டுல தருவாங்களா?''

ஜம்புலிங்கம், ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

''லாவண்யாவா... எந்த லாவண்யா..?''

''அதான் சார்... உங்க உறவுக்காரங்க பொண்ணு... லாவண்யாவோட அம்மா, உங்களுக்கு உறவுதானே?''

அவ்வளவுதான். 'பகபக' வெனச் சிரித்தார்.

''அட மடையா... அந்த ரெட்டை சடைப் பொண்ணா... அப்பன் பேரு தெரியாத ஈனப் பொறப்பில்லே அது? அதையா கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறே..? நீ மட்டும் நான் சொன்னபடி கேளு.... லாவண்யா மாதிரி பத்து பொண்ணுங்களை கோட் பாக்கெட்டுல வச்சுக்கலாம். உனக்குப் பொண்ணு கொடுக்க கோடீஸ்வரனெல்லாம் காத்திட்டிருப்பான்...''

இதுவும் பிருத்விக்குப் புரியவில்லைதான் என்றாலும் - தான் மகா உயர்வாக நினைத்து, மனசுக்குள் ஆராதித்துக் கொண்டிருக்கிற லாவண்யாவைப் பற்றி - ஜம்புலிங்கம் மட்டமாய் பேசியது பிடிக்கவில்லை.

ஆனாலும் பிருத்வி புத்திசாலி. இதற்காக மடத்தனமாக

ஜம்புலிங்கத்தைப் பகைத்துக் கொள்ளவில்லை.

மௌனமாய் - தனது எண்ணங்களை வெளிக்காட்டாமல் - அவர் காட்டிய வழியைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டான்.

முதன் முதலில் ஜகதாவுடன் ஜோதீஷ்வரையும் பார்த்த போது அவன் வியப்பு இன்னும் பல மடங்காகியது.

'இத்தனை புத்திசாலியாய் ஒரு பிள்ளை இருக்கும்போது - இந்த மனிதர் தன்னை எதற்காக..?'

இதை ஒரு முறை அவன் கேட்டே விட்டான்.

''ஜோதீஷ்ஷுக்கு விளையாடத் துணை வேணும்னு என்னை இங்கே அழைச்சிட்டு வந்தீங்களா..?''

இதற்கு உடனே பதிலளிக்கவில்லை ஜம்பு.

''நீ இங்கே எதுக்காக வந்திருக்கேங்கறது - உனக்கே கொஞ்ச நாளானதுக்கு அப்புறம் தெரியும். அது வரைக்கும் நீ, ராஜா வீட்டுக் கண்ணுக்குட்டிதான்... விளையாடு...''

அப்போதைக்கு பிருத்வி அது பற்றி - அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை...

என்னதான் வீட்டுக்கு அடங்கிய பிள்ளையாக, ஜம்புலிங்கம் சொன்னபடியெல்லாம் கேட்டாலும் - லாவண்யா விஷயத்தில் அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மும்பையிலிருந்து மதுரை வந்த பிறகும் - அவள் தொடர்பு நீடித்தது...

பிருத்வி பணக்கார இடத்தைச் சேர்ந்து விட்டதினால் - லாவண்யாவின் உறவினரும் அவனை லேசில் விடுவதாக இல்லை...

''வாங்க மாப்பிள்ளை... எங்க வீட்டுப் பொண்ணு நினைவு இருக்குதா? அதுதான் உங்களையே நினைச்சுநினைச்சு வெந்து சுண்ணாம்பாயிட்டு இருக்குது. உங்களுக்கு சுத்தமா மறந்தே போச்சு போல இருக்கே...''

''எங்கே... படிப்பை முடிச்சவுடனே, ஜம்புலிங்கம் பெரிய எடமாப் பார்ப்பாரு. நாங்க எல்லாரும் இவர் கண்ணுல படுவோமா?''

பிருத்வி அசடு வழிவான். ஒரிரு முறை கல்லூரியில் டூர் போவதாகச் சொல்லி விட்டு லாவண்யாவுடன் மும்பை, கொல்கத்தா என்று சுற்றியுமிருக்கிறான்.

அப்பொழுதெல்லாம் ஜம்புலிங்கம், அவனைத் தனியே அழைத்து இதைத்தான் சொல்லுவார்:

''எந்தப் பொண்ணுக்கும் அடிமைப்பட்டுடக்கூடாது. உன் கிட்ட பணம் இருக்கற வரைக்கும்தான் இவளுங்களுக்கு உன்மேல கரிசனம் பொங்கும்... 'காசில்லாதவன் கடவுளானாலும் கதவைச் சாத்தடீ'-யின்னு பாட்டே இருக்குது...''



ஆனால் அப்பாவியான ஜகதா, தன் மகனையும் இவனையும் ஒரே தராசில்தான் வைத்துப் பார்த்தாள். அவளால் பிருத்வியை ஒரு தாயில்லாத குழந்தையாகத்தான் பார்க்க முடிந்ததே தவிர - இவனது இன்னொரு முகம் தெரியவே தெரியாது.

''என்னங்க..! பிருத்வி - 'சிநேகிதப் பசங்களோட டூர் போகணும்; அப்பா கிட்ட சொல்லி 'பர்மிஷன்' வாங்கித் தாங்க'ன்னு காலைலயே பிடிச்சு சொல்றான்...''

''த்ச். வேற வேலை இல்லே அவனுக்கு.''

ஜம்பு இப்படிச் சொல்லி விட்டால் போதும். ஜகதா, வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வருவாள்.

''அது என்ன, ஒருத்தனை படிப்புக்காக அமெரிக்கா, ஆப்ரிக்கான்னு அனுப்ப வேண்டியது. இன்னொருத்தனை பக்கத்துல இருக்கற மும்பை கொல்கத்தாவுக்கு அனுப்பக் கூட யோசிக்கறது... நீங்க வேணா அவனுக்காக நயா பைசாத் தர வேண்டாம். நான் தந்துக்கறேன்...''

ஜம்பு, மீசையைத் தடவியவாறே சிரிப்பார்:

''எல்லாம் உன் பணம்தானே ஜகதா?''

ஜகதாவிற்கு கண்கள் பனித்து விடும். கணவரை குற்றம் சாற்றுவது போலப் பார்ப்பாள்.

''இன்னமும் நீங்க, உன்னுது - என்னுதுன்னு பிரிச்சு வச்சுத்தான் பேசறீங்க... சுட்ட மண்ணும், பச்சை மண்ணும் ஒட்டாதுங்கறது சரியாத் தான் இருக்கு...''

''அடடா... நான் சாதாரணமாச் சொன்னேன் ஜகதா... உன் செல்லப் பிள்ளைக்கு என்ன செய்யணும் சொல்லு... எவ்வளவு பணம் தரணும்?''

''நீங்க பணம் தர்ற லட்சணம் எனக்குத் தெரியாதா? போன வருஷம் காலேஜ் டூருக்கே ஆயிரம் யோசிச்சு ஐநூறு ரூபா கொடுத்து அனுப்பினீங்க...''

இப்படிச் சொல்பவள் பிருத்வியின் கையைப் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு உள்ளே போய் விடுவாள்.

கை நிறைய பணம். மணக்க மணக்க புளி சாதம்; மிளகாய் பொடி தடவிய இட்லி...

''இருக்கட்டும்; எல்லாமே இளசுகளாப் போறதுங்க... வழியில பசிச்சா என்ன கிடைக்குமோ, எப்படி இருக்குமோ...''

பிருத்வி அத்தனையையும் கொண்டு போய் லாவண்யாவின் வீட்டில் சேர்த்து விட்டு சூட்கேஸ் நிறைய மது வகைகளையும், உருளைக்கிழங்கு வறுவல் - பக்கடா வகையறாக்களையும் எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவான்.

வாழ்க்கை இப்படியே போயிருந்தால் பிரச்னையே இல்லை.

ஒரு நாள், ஜம்பு அவனை ரகசியமாய் அழைத்துப் பேசினார்.

''உட்காரு...''

''டிஸ்கஷன் சீக்கிரம் முடிஞ்சிடும் இல்லையா..?''

''ஏன், லாவண்யா காத்துட்டிருக்காளா?''

''..........''

''இங்கே பாரு... எங்கேயோ மும்பை சேரியில் வளர்ந்த உன்னை அழைச்சிட்டு வந்து, படிக்க வச்சு, உனக்குன்னு ஒரு பர்ஸனாலிடிய ஏற்படுத்திக் கொடுத்தது எல்லாம் - நீ லாவண்யாவோட குலாவறதைப் பார்த்துட்டு நிற்கறதுக்காக இல்லே.''

பிருத்வி தர்ம சங்கடத்துடன் பலவீனமாய் முறைத்தான்.

''இப்ப என்னை என்ன செய்யணும்ங்கறீங்க?''

''அப்படி கேளு. சொல்றேன்...''

ஜம்பு, தொண்டையைச் செருமியபடி சொன்னார்:

''இன்னிக்கு நீயும் நானும் பணத்துல புரண்டுகிட்டு இருக்கோமே... இதெல்லாம் எத்தனை நாளைக்கு நீடிக்கும்னு நினைக்கறே? ஜோதீஷ்வர் அமெரிக்காவுல இருந்து வருவான்... அவனுக்காக்வே மகாலட்சுமியோட ஒண்ணு விட்ட தங்கச்சி மாதிரி இங்கே மாமன் மக அபர்ணா காத்திட்டிருக்கா. பணமும் பணமும் ஒண்ணா சேர்ந்திடும். நீயும், நானும் கட்டை விரலைச் சூப்பிட்டு உட்கார்ந்திருக்கப் போறோம்...''

''எனக்கென்ன... படிப்பு இருக்கு... லாவண்யாவைக் கல்யாணம் பண்ணிட்டு எங்கேயாவது வேலை தேடிட்டு செட்டிலாயிடுவேன்'.'

''உக்கும்...''

ஜம்பு நக்கலாய் உதட்டைப் பிதுக்கினார்.

''நினைச்சிட்டிரு - லாவண்யா உன் கூட குடும்பம் நடத்த வருவாளுன்னு... அவளை விடு; அவ பாட்டிக்கே கூட இன்னும் காபி போடத் தெரியாது. அப்பேர்பட்ட குடும்பம். பணம்னா என்ன வேணுமானாலும் செய்யத் தயார். நீ போய் உன் லாவண்யாவைக் கூப்பிடு. அவ என்ன சொல்லுவா தெரியுமா... 'பைசா பிரயோஜனமில்லாத உன்னை நம்பறதை விட, ஜம்பு அங்கிளை வேணுமானா ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கறேன்'னு சொல்லுவா...''

''இதைச் சொல்றதுக்காகவா கூப்பிட்டீங்க?''

''இல்லே. சொல்றேன் கேளு... அமெரிக்காவுக்குப் போன ஜோதீஷ்வர் இப்போதைக்கு வரக் கூடாது... உன் கல்யாணத்துக்குத்தான் வரணும்.''



''என்னை விட அவன்தானே பெரியவன்... அவன் கல்யாணம் தானே முதல்லே நடக்கும்..?''

''அதுதான் இல்லே... உனக்குத்தான் முதல்லே... அவனுக்குப் பார்த்து வச்சிருக்கற அபர்ணாவை நீ கட்டிக்கப் போறே...''

''அந்த உழக்கையா...? ஏற்கனவே லாவண்யாவுக்கு நான் சத்தியம் செஞ்சு தந்திருக்கேன் - அவ கழுத்துல தாலி கட்டுவேன்னு...''

''கட்டேன். முதல்லே இவ கழுத்துல கட்டு... அப்புறம் அவளைக் கட்டிட்டு குட்டிச் சுவராப் போ. எனக்கு வேண்டியது நீ விநாயகத்துக்கு மாப்பிள்ளையாகணும்... அவ்வளவுதான்...''

பிருத்வி திகைத்து நின்றான்.




நினைவு நீச்சின்றி கிடக்கும் பெண்ணை, உடனே, போலீஸின் உதவியுடன் மதுரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதில் அப்படியொன்றும் சிரமமிருக்கவில்லை ஆனந்துக்கு..

அத்தனை பயங்கர விபத்திலும் அவள் மாத்திரம் எப்படி தப்பித்தாள் என்பதுதான் ஆனந்தின் ஆச்சரியம்...

கணவன் - நிலக்கரி சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்ட பெரிய கரித்துண்டு போலக் கிடந்தான்...

உயரத்திலிருந்து விழும் போது - அவள் அமர்ந்திருந்த கார் கதவு சரியாய் மூடப் படாததால் - விழும் வேகத்தில் கதவு திறக்க - இவள் வெளியே சரிந்து விட்டாள்... ஆழமான காயம் அதிகமில்லாவிட்டாலும் கண்களிரண்டும் வெந்து விட்டது...

''முதல்லே புண் ஆற வேண்டும். அப்புறமாத்தான் ஆபரேஷன் செஞ்சு, பார்வைய வரவழைக்க முடியுமான்னு பார்க்கணும்...''

இதைக் கேட்ட அவள் தந்தை கதிகலங்கி, 'ஹா'வென இதயத்தைப் பிடித்துக் கொண்டு அமர்வதையும், அவரைத் தேற்றுவாரின்றி இன்னொருபுறம் கணவன் மனைவி போலத் தோற்றமளித்த இருவர் தனக்குள் பொங்கிப் பொங்கி அழுவதையும் பார்த்தபடி ஆனந்த் ஒதுங்கி நின்றான்.

நாணாவும் அவன் பின்னாலேயே நிற்கிறான். அவன் பய
அவனுக்கு...

''ஆனந்து...''

''என்ன..?''

''எனக்கென்னமோ இதுக்கு மேல இங்கே இருக்கறது அநாவசியம்னு படறது...''

''சும்மாயிருடா...''

''இப்ப சொல்லுவே. அடி பட்டிருக்கறது அழகான பொண்ணுக்கில்லே...''

''அபத்தம்... வாயைத் திறக்கவே செய்யாதே... அத்தனையும் அபத்தம்.... அந்தப் பொண்ணுக்கு கல்யாணமாகி, புருஷனோட ஹனிமூனுக்கு கொடைக்கானலுக்கு புறப்பட்டிருக்கா... நடு வழியில கண்ணையும் பறி கொடுத்து, கண்ணுக்கு கண்ணான கணவனையும் பறி கொடுத்து...''

''உக்கும்... மனசுக்குள்ள என்னமோ பராசக்தி வசனம் பேசற நினைப்பு... இந்த சாமர்த்தியம்தான் இருக்கே தவிர - படிப்புல பெப்பே!''

ஆனந்த், திரும்பிப் பார்த்து முறைக்கிறான்.

''என்ன முனகறே?''

''ஒண்ணுமில்லே... கேஸை திண்டுக்கல் ஆஸ்பத்திரியிலேயே சேர்த்திருந்தா இந் நேரத்துக்கு மளமளன்னு மலைக்குப் போய் குளிச்சிட்டு சாப்பிட்டு முடிச்சிருக்கலாம். மதுரை வந்தாச்சு. எனக்கோ குளிக்காம சாப்பிடப் பிடிக்காது. பேசாம நம்ம வீட்டுக்குப் போய் காதும் காதும் வச்ச மாதிரி குளிச்சிட்டு ரெண்டு பேருக்குமா சேர்த்து சாம்பார் சாதமா ஒரு தூக்குலப் போட்டு எடுத்திட்டு வந்துடட்டுமா..?''

''மடையா... என்னை சீண்டி விடணும்னே பேசறியா... வீட்டுப் பக்கம் போய் - நான் மதுரையில் இருக்கறதைச் சொன்னே... கழுத்தை நெரிச்சிடுவேன்... உனக்கு குளிச்சு, சாப்பிடணும்னா மேலமாசி வீதிக்குப் போ...''

நாணா, 'பொக்'கென அடங்கி விட்டான்.

அபர்ணாவைப் பரிசோதித்த டாக்டர், விநாயகத்திடமும், ஜகதாவிடமும் சொல்கிறார்:

''பின் மண்டையில பலத்த அடி பட்டிருக்குங்க.... அந்தக் காயம் குணமாயிடுச்சுன்னா பார்வை நரம்புங்க தானாகவே வேலை செய்ய ஆரம்பிச்சிடணும். கண்ணுல வேற நெருப்புக் காயம்... ரெண்டும் ஆறினதுக்கு அப்புறமா அதிருஷ்ட வசமா கண் பார்வை நல்லாவே தெரியலாம். சான்ஸ் இருக்கு...''



**அஞ்சறைப் பெட்டி**

### மாணிக்கம்

இதை அணிபவர்கள் மேலும்மேலும் செல்வம் பெறுவார்கள். மாணிக்கம் இரு நிறம் உடையவை. நிறம் மங்கலானவை. உடைந்தவை. ஆகியவை குற்றமுள்ள மாணிக்கம் ஆகும்.

''ஐயோ... பார்வை வராமப் போயிடுச்சுன்னா... நான் என்ன பண்ணுவேன் டாக்டர்... ஒரே பொண்ணு... கல்யாணமான மறுநாளே இப்படியொரு சோதனை வரணுமா... நான் யாருக்குன்னு சமாதானம் சொல்லுவேன்...''

விநாயகம் 'படீர் படீ'ரென மார்பில் அறைந்து கொள்ள, ஜம்புலிங்கம் ஓடி வந்து அவரது கரத்தைப் பிடித்துக் கொண்டு நெகிழ்ந்த குரலில் சொல்கிறார்:

''இங்கே பாரு விநாயகம்... இப்ப, நம்ம மூணு பேருக்குமே ஆறுதலா எஞ்சி நிற்கிறது அபர்ணா ஒருத்திதான். அவளை எப்பாடு பட்டாவது காப்பாத்தி, கண்ணைக் கொடுக்கப் பாடுபடறதுதான் நம்ம கடமை. அதை விட்டுட்டு பொம்பிளை மாதிரி அழுதுகிட்டு உட்கார்ந்திருந்தா எப்படி?''

''எப்படியும் நீங்க, இவங்களை சென்னைக்கு அழைச்சிட்டுப் போய் டிரீட்மெண்ட் கொடுக்கறதுதான் நல்லது. அங்கே பெரிய டாக்டர்ஸுக்கு நான் லெட்டர் தர்றேன்.''

இப்பொழுது ஆனந்த் தானாகவே முந்திக் கொள்கிறான்.

''எந்த டாக்டர்னு சொல்லுங்க... நான் அழைச்சிட்டு போய் என்னாலான ஹெல்ப்பைப் பண்ணறேன்.''

''நீங்க..?''

இந்தப் பக்கம் நாணா, அவனது பாதத்தை மிதித்து - 'சொல்லாதே' என்று சமிக்ஞை செய்தும் அவன் அதைப் பொருட்படுத்த வில்லை.

'ஆபத்துக்குப் பாவமில்லை...'

அவன், தன்னைப் பற்றி - தனது மூதாதையர் பற்றிச் சொல்கிறான்.

டாக்டரே ஒரு கணம் அசந்து விட்டார்.

''எம்.டி. வேணுகோபால் மகனா நீங்க?''

''ஹி... ஆமாங்க...''

''அடேங்கப்பா, அவர் எவ்வளவு பெரிய மனுஷர்..! ஆமா, நீங்க என்ன பண்ணறீங்க..?''

''டாக்டருக்குத்தான் படிக்கறாரு... மெட்ராஸ்லே...''

நாணா முந்திக் கொள்கிறான்.

''ஆமா... இப்ப எக்ஸாமில்லே..?''

''அதனாலத்தாங்க மதுரை வந்துட்டாரு. பரீட்சையெல்லாம் முடிஞ்சதுக்கு அப்புறம் மெட்ராஸ் போவார்...''

டாக்டர் புன்னகைக்கிறார்.

ஆனந்த், முகம் முழுக்க அசடு வழிய, ஏதோ சொல்லி சமாளிக்கிறான்.

''நங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லீங்க... நான் டாக்டரேட்டுக்குப் படிக்கிறேன்.... இந்த... இலை செடி கொடி - இதெல்லாம் ஆராய்ச்சி பண்ண வந்தேனா...''

அவன் சொல்லி முடிக்கவில்லை, கட்டிலிலிருந்து மெல்லிய விசும்பல் ஒலி கேட்கிறது...

அபர்ணாதான் அழுகிறாள். ஜகதா ஓடிப் போய் மருமகளின் முகத்தை, தவ் நெஞ்சோடு சாய்த்து வைத்துத் தேற்றுகிறாள்.

''என் கண்ணில்லே... அழாதே... இப்ப அழுதா கண் ஸெப்டிக் ஆக சான்ஸ் இருக்குதுன்னு டாக்டர் சொல்றாங்க இல்லே... அழாதேம்மா...''

சொன்னாளே தவிர ஜகதாவினாலேயே அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

தாங்கிக் கொள்ளக் கூடிய துயரமா அது? மூக்கை உறிஞ்சியவள், நடுநடுவே கணவனைப் பார்த்துப் பரிதாபமாய்க் கேட்கிறாள்.

''அமெரிக்காவுக்கு தகவல் கொடுத்தீங்களா... தம்பியோட கல்யாணத்துக்குத் தான் வரல்லே... அவன் காரியத்துக்காவது...''

இதற்குள் விநாயகம் தொண்டையடைக்கக் கூறுகிறார்:

''அம்மா ஜகதா... பிருத்வியோட ஆத்மா சாந்தியடைய நீ என்ன செய்யணும்னு நினைக்கறியோ - அத்தனையும் செய். ஆனா, அதுல என் குழந்தைய கலந்துக்க செய்யாதே... அது பூ. வாழ்க்கையின்னா என்னன்னு அதுக்கு இன்னும் எதுவுமே தெரியாது...''

சற்று தொலைவில் நின்றிருந்த ஆனந்துக்கு கூட அழுகை வந்தது.

இது போல ஒரு விபத்துக்குள்ளாக்கிய கடவுளை மனசாரத் திட்டுகிறான் அவன்.

ஜம்புலிங்கம், விநாயகத்தின் பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்காருகிறார்.

''அவன் பணத்தை ஜாக்கிரதையா எடுத்திட்டுப் போகணுமேயின்னு கவலைப் பட்டேன்... கடைசியில அவனே... விநாயகம், நான் கொடுத்து வச்சது அவ்வளவுதாம்பா... தாயில்லாக் குழந்தையின்னு - மனசுல ஏக்கம் வளர்ந்துடக் கூடாதேயின்னு பதினஞ்சு வருஷம் கான்வென்ட்லே விட்டு வச்சேன். ஜகதா வந்ததும் வட்டியும் முதலுமா அன்பைப் பொழிஞ்சா. நீ, கண்ணுக்குக் கண்ணா வளர்த்த உன் பொண்ணையும் கொடுத்தே... கொடுத்து வைக்கலையே அவனுக்கு...''

விநாயகத்தை சமாதானப் படுத்தப் போய் கடைசியில் ஜம்புலிங்கம் அணை உடைந்தாற் போல பெரும் குரல் எடுத்து அழ...

''பேஷண்ட் பக்கத்துல சத்தம் போடாதீங்க... பெரியவங்களா சேர்ந்து அந்தப் பொண்ணைத் தேற்றுவீங்களா... அதை விட்டுட்டு... எல்லாரும் சேர்ந்து ஒப்பாரி வைக்கறீங்களே... கொஞ்சம் எழுந்து வெளி ஹாலுக்குப்



போங்க...''

அதட்டிய டாக்டர், மறுபடியும் ஆனந்தைப் பார்த்து குறுநகை புரிகிறார்.

''மிஸ்டர் ஆனந்த். இப்ப உங்களுக்கு வேலை எதுவும் இல்லையின்னா - பேஷண்ட் பக்கத்துல உட்கார்ந்து கவனிச்சுக்க முடியுமா?''

''ஓ...எஸ்... இட் இஸ் மை பிளஷர்...''

''நீங்க ஹவுஸ் சர்ஜன் ஆனதுக்கு அப்புறம் பார்க்க வேண்டிய டியூட்டியை இப்பவே தர்றேன்...''

''ஹி...ஹி...ஹி...''

''இவங்க யாரையும் இங்கே கூட்டம் போட விடாமப் பார்த்துக்குங்க...''

டாக்டர், இவனது பதிலுக்குக் கூட காத்திராமல் டக் டக்கென பூட்ஸ் சத்தமிட நகர - நாணாவுக்குத்தான் பற்றிக் கொண்டு வந்தது.

''நல்லாயிருக்கே கதை... இவரு என்ன, உன்னை - இவர் வீட்டு எடுபிடியின்னு நினைச்சிட்டாரா..? ஒரு பொம்பிளைக்கு காவலிருக்கச் சொல்லிட்டுப் போறாரே... இந்த வார்த்தை - உங்க அம்மா காது வரைக்கும் போச்சுன்னா என்ன நடக்கும் தெரியுமா...''

ஆனந்த், நாணாவின் கையில் முழுசாய் ஒரு நூறு ரூபாய் தாளை அழுத்துகிறான்.

''போடா... போய் காலேஜ் ஹவுஸ்லே ஒரு ஃபுல் மீல்ஸ் அடி... அப்படியே ஏதாவது மேட்னி போயிட்டு நிதானமா வந்து சேரு... போ...''

''ஆனந்து... உன்னைப் பட்டினி போட்டுட்டு என்னை சாப்பிடச் சொல்றியா?''

''தோஷமில்லே. போ.''

''உனக்கு 'காலேஜ் ஹவுஸ்' ரசம்னா பிடிக்குமே...''

''உனக்கு 'காலேஜ் ஹவுஸ்' ரசம்னா பிடிக்குமே... நீ இப்ப

''நாளைக்கு ஸ்பெஷலா ஒரு அண்டா வாங்கிக் குடிக்கிறேன். நீ இப்ப போ... தப்பித் தவறி கீழச் சித்திரை வீதிப் பக்கம் போயிடாதே...''

''ஏன்?''

''என்னா கேட்கறே... பாவி, அங்கேதானே நம்ம வீடு இருக்கு...''

''அட... பார்த்தியா... அதை மறந்துட்டேன்...''

நாணா, நூறு ரூபாய் கிடைத்த தெம்பில் புதுசாய் - நடராஜர் மாதிரி இடது காலை ஒரு உதை உதைத்துக் கொண்டு கிளம்புகிறான்...

''சார்.. யாராவது பக்கத்துல இருக்கீங்களா... அப்பா...''

அபர்ணாவின் குரல் கேட்டதும் விழுந்தடித்துக் கொண்டு கட்டிலருகே செல்கிறான் அவன்...

''என்ன வேணுங்க?''

''வண்டியில இருந்த எல்லாமே எரிஞ்சு போச்சா...?''

''ஏன்...ஏன் கேட்கறீங்க...? எல்லாமே போச்சு.. கதவு சரியா மூடாததாலே நீங்க கீழே விழுந்துட்டீங்க.. வண்டி தரையில மோதின வேகத்துல எரிஞ்சு... இருங்க... உங்க பக்கத்துல ஒரு டேப் ரிகார்டர் கிடந்த ஞாபகம்...''

அபர்ணா வெற்றிடத்தை வெறித்தபடி - இரு கைகளாலும் துழாவுகிறாள். சோகம் கப்பிய முகத்தில் மின்னல் கீற்றாய் ஆர்வம்...

'அது...அது எங்கே..?''




அந்த வீடு - ஒரு குட்டி நர்ஸிங் ஹோம் ஆகி விட்டது. ஜகதாவும் விநாயகமும் அபர்ணாவின் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்றுதான் விரும்பினார்கள்.

முடியவில்லை. மகளுக்கு இப்படியொரு கொடுமை நேர்ந்து விட்டதைத் தாங்க முடியாத விநாயகத்துக்கு நெஞ்சு வலி வந்து, ஒரு பக்க கையும் காலும் இழுத்து விட்டது.

இல்லையென்றால் அவளுடன் அவர்களும் கிளம்பி இருக்க வேண்டியவர்கள்தானே...

ஜம்புலிங்கம் - சென்னையிலுள்ள தங்களது பங்களாவிலேயே அபர்ணா தங்கி சிகிச்சை பெற வேண்டும் என்றுதான் வற்புறுத்துகிறார்.

''கடல் மாதிரி பங்களா இருக்கு... கையத் தட்டினாப் போதும் - ஓடி வந்து வேலை செய்ய பத்து பேர் காத்திருக்காங்க... அப்படியிருக்கறப்ப என்னத்துக்கு முன்னே பின்னே தெரியாத பையன் வீட்டுல தங்கணும்... அதுவும், அவங்க வீட்டுல பெரியவங்க துணை கூட இல்லே...''

ஜகதாவுக்கும் ஜம்பு சொல்வது நியாயமாகவே பட்டது.

''ஆமா அபர்ணா. மாமா சொல்றதும் யோசிக்க வேண்டிய விஷயமாத்தான் இருக்கு....''

அபர்ணா தீர்மானமாய் சொல்கிறாள்:

''இல்லே அத்தை... மெட்ராஸ் பங்களாவுக்கு நான் வந்திருக்கறது தெரிஞ்சா, என் சிநேகிதிங்க, இன்னும் அப்பாவோட ஃபிரண்ட்ஸ் எல்லாரும் துக்கம் விசாரிக்க வருவாங்க. நான் எதை மறக்கணும்னு போறேனோ - அதை மறுபடி மறுபடிக் கிளற நான் விரும்பவில்லை. மேலும், துள்ளித் திரிஞ்ச அந்த வீட்டுல கண் தெரியாம நான் தடவித் தடவி நடக்க விரும்பலே... ப்ளீஸ்... எனக்கு அறிமுகமே இல்லாத இடம் வேணும்... யாரும் என்னைப் பத்தி விசாரிக்கக் கூடாது...''

## அஞ்சறைப் பெட்டி

### நீலம்

நவ ரத்தினங்களில் ஒன்றான நீல மணியை அணிந்தால் கணவன் - மனைவி இடையே அன்பு அதிகமாகும். இதை அணிபவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் இம்மணி நிறம் மாறி விடும்.

வேண்டாமா..?''

''தாராளமா அனுப்பு.. அதே சமயத்துல அந்த மனுஷர் ஆனந்த் கிட்டயும் சொல்லி வையுங்க... அவங்க வீட்டுல நாம தங்கறதுக்கான வாடகையையும், சாப்பாட்டுச் செலவையும் கொடுத்திடுவோம். வாங்கிட்டுத்தான் ஆகணும்னு... ஒரு நாளா, ரெண்டு நாளா... ட்ரீட்மெண்ட்டுனு இன்னும் எத்தனை மாசம் இழுத்தடிக்கப் போறாங்களோ...''



''அடியேன் இங்கேதான் இருக்கேன்...''

ஆனந்த் குரல் கொடுக்கிறான்.

''உங்க கிட்ட பணம் இருக்கு.. யார் கேட்டாலும் ... கிழிச்சிடுவீங்க... இருக்கட்டும்... அதுக்குன்னு யார்கிட்ட சாப்பாட்டுச் செலவு, வாடகை இதையெல்லாம் பத்தி பேசறதுன்னு ஒரு இங்கிதம் தெரிய வேண்டாம்..?''

''ஏன்...''

''நான் படிச்சு டாக்டராகணும் கறதுக்கரக - எங்க அம்மா பத்து கிரவுண்டு நிலம் வாங்கி, அதுல அஞ்சு கிரவுண்டுக்கு வீடு கட்டி கொடுத்திருக்காங்க. பையன் படிச்சு படிச்சு, தொண்டை வறளா இருக்கணுமேயின்னு வீட்டுப் புழக்கடையில மூணு எருமை... ரெண் பசு. ஒரு வேள்ள, வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்து படிக்கறதா - எங்கே மகனுக்கு மூளை குறுகிப் போயிடுமோ - ன்னு சுத்தி வ தோட்டம்... பரீட்சைக்கு கடைசி நிமிஷம் வரைக்கும் படிச்ச கடைசியில - பஸ்ஸைக் 'கோட்டை' விட்டுட்டா எ பண்ணறதுங்கறதுக்காக ஒரு சின்ன மாருதி... இத்தனை அனுபவிச்சுக்கிட்டு நான் படிக்காம பரீட்சை சமய கொடைக்கானல்லே வந்து, டீ குடிச்சு, பலாப்பழம் ... பேசிட்டிருக்கேன்... என்கிட்ட வந்து சாப்பாட்டுப் பணத்தைப் பத் வாடகை பத்தியும் பேசலாமா... இனிமேலாவது தகுதி தெ பேசுங்க...''

'களுக்'

முதல் தடவையாக அபர்ணா சிரிக்கிறாள். சின்னதாய் பிரகா ஆனந்த் அப்படியே அபர்ணாவின் முகத்தைப் பார்த்தபடி நி வசீகரமாக...

'இவள் சிரிப்புதான் எத்தனை வசீகரமாக...

''ஐயோ... கண்ணுல கட்டு போட்டிருக்கறப்பவே இவளோட சிரிப்பு அள்ளிட்டுப் போறதே... இன்னும் முகம் தெரிய, கண் மலரச் சிரிச்சா... மதுரையையே இல்லை, இவளோட சிரிப்புக்கு சின்னப் பரிசாக் கொடுக்கலாம்...'

அவள், தலையை உலுக்கி, தனது கற்பனைகளை உதறியபடி சொல்கிறாள்.

''இன்னிக்கு வேலைக்காரங்களை ரயில்லே அனுப்பிடலாம். நாளைக்கு கார்லே...''

அவள் பயத்துடன் தலையசைக்கிறாள்.

''கார் வேண்டாம்!''

''ஓ.கே... அப்ப ஃப்ளைட்லே போயிடலாமா..?''

''..........''

''அதுவும் பயமா... ரயில்லேயாவது ஓ.கே.யா..? இல்லையின்னா பாதயாத்திரையா நடந்துதான் போகணுங்க...''

மீண்டும் அவள் முகத்தில் இள நகை.

அப்பாடா... இப்போதைக்கு இது போதும்!

**நா**ணாவுக்கு பூமியில் கால் பதியவில்லை. கடைசியில் மேல மாசி வீதி பெண் - அபர்ணாவை கவனித்துக் கொள்ளும் பெண்ணாம். சின்ன வயதிலிருந்தே - அவள்தான் குளிப்பாட்டி, பின்னி, அவளுடன் பள்ளிக் கூடம் வரையில் காரில் போவாளாம்.

இப்பொழுது அவளும், அபர்ணாவுக்குத் துணையாக வந்தது, நாணாவுக்கு ரொம்பவும் வசதியாகப் போயிற்று.

வழக்கமான செவ்வாய் - இட்லி, புதன் - புட்டைக் கூட இவளுக்காக மாற்றி விட்டான்...

''என்னடா இது... இன்னிக்கு சப்பாத்தியில்லே...? வேற என்னத்தையோ கொண்டு வந்து வைக்கறே..?''

''சோனா பட்டூரா ஆனந்து... ஒரு சேஞ்சுக்காக செஞ்சேன்... எப்படியிருக்கு..?''

''பிரமாதமாத்தான் இருக்கு. அவங்க எசமானிக்குப் பிடிக்குதான்னு கேளு...''

''அவங்க எதைத் தொடறாங்க.. எப்பவும் அந்த டேப் ரிகார்டரைக் கட்டிட்டு அழறாங்க...''

ஆனந்துக்கு இது வருத்தமாகத்தானிருக்கிறது... ஆனால் அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்றே தெரியவில்லையே!

சென்னைக்கு வந்து சேர்ந்த பத்து நாட்களில் அவள் - சின்னச் சின்னச்



செய்தியாக, முன்னுக்குப் பின் முரணாக - விபத்து நடந்த அன்றைய சம்பவங்களைப் பற்றியும், அதைப் பின் தொடர்ந்து தனது குடும்பத்திலுள்ள பாதிப்புகளையும் சொல்லி விட்டாள்.

அவனும் அலுக்காமல் கேட்டுக் கொண்டான்.

''எனக்கு முதல்லே ஜோதிஷ்வரைத்தாங்க கட்டி வைக்கறதா இருந்தது. நல்ல வேளை... என்னோட துரதிருஷ்டம் அவரைத் தாக்கலே... வேற ஒரு பொண்ணை விரும்பினதாலே தப்பிச்சிட்டாரு...''

''என் கல்யாணத்துக்கு முன்னாலே பிருத்வியை நிறைய தடவை பார்த்திருக்கேனே தவிர - இவர்தான் எனக்குப் புருஷனா வரப் போறார்னு தோணவே இல்லே... சாதாரணமா பொண்ணுங்களுக்கு அது மாதிரியான தீர்க்கதரிசனம் எல்லாம் உண்டுன்னு சொல்லுவாங்க இல்லே...''

''கல்யாணத்துக்கு மறுநாள். எங்களை காஷ்மீருக்கு அனுப்பணும்னு தான் எங்க அப்பா சொன்னார். அது மாதிரி நடந்திருந்தா இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாமோ... ப்சு... போகணும்னு விதியிருந்தா - பிளாட்பாரத்துல நடக்கறச்சே கூட...''

''என்ன சொல்ல வந்தேன்? எங்க அப்பாவுக்கு எங்களை காஷ்மீருக்கு அனுப்பணும்னு ஆசை. ஆனா ஜம்பு மாமாதான் இந்த கொடைக்கானல் டிரிப்பை ஏற்பாடு செஞ்சார்...''

''கொடைக்கானல்லே அம்பது லட்ச ரூபாய்லே ஒரு காபித் தோட்டமும், பெரிய பங்களாவும் எனக்காக அப்பா வாங்க ஏற்பாடு செஞ்சிருந்தார். அந்தப் பணத்துல இருபது லட்சத்தை - பினாக்லே - பணமாக் கொடுத்திடணும்னு அந்தத் தோட்ட முதலாளி சொன்னாராம். அதனால பிருத்வி கிட்ட இருபது லட்சம் அடங்கின சூட்கேஸை, அப்பா கொடுத்தார். மீதி முப்பது லட்சத்துக்கு செக் என்னைக் கொடுக்கச் சொன்னார்...''

''கொடைக்கானல் போய், பணத்தைக் கொடுத்துட்டு உடனே திண்டுக்கல் வந்து - பத்திரம் ரிஜிஸ்தர் பண்ணறதா இருந்தோம். என்ன வேளையில புறப்பட்டோமோ...''

''ஜம்பு மாமா அழறதைத்தான் என்னால தாங்கிக்க முடியலே ஆனந்த்... அவர் பாவம். ஏதோ எங்களுக்கு நல்லது நினைக்கப் போய் கடைசியில இப்படி ஆயிடுச்சேயின்னு புலம்பறப்ப... கண் குருடான தோட, காதும் கேட்காமப் போயிருந்தாத் தேவலையேன்னு தோணறது...''

''புது மணத் தம்பதிகளை அவங்களுக்கே சொந்தமான ஒரு எஸ்டேட் பங்களாவுல தங்க வைக்கணும்னு நினைச்சார். இப்ப, பிள்ளையோட உங்க இருபது லட்சத்தையும் சாம்பலாக்கிட்டேனேயின்னு அழறார்...''

''பத்து லட்சமென்ன... அப்பாவோட சொத்தும் - அத்தையோட சொத்தும் சேர்த்தா - கோடிக் கணக்குல இருக்கும்.... பணமா பெரிசு... இத்தனைப் பணத்தைக் கொடுத்தாலும் போன உசிரை யாராலேயும் திருப்பிக் கொண்டு வர முடியலையே!''

அபர்ணாவின் புலம்பல் கடைசியில் இதில் வந்துதான் நிற்கும்...

நடு நடுவே ஏக்கம் தொனிக்க - இதையும் சொல்லாமல் விடமாட்டாள்.



## அஞ்சறைப் பெட்டி

### பவளம்

**இ**து மிளகாய் சிவப்பு கலரில் இருக்கும். இதனை அணிந்தால் தைரியமும், விடா முயற்சியும் இருக்கும்.

''இத்தனை நடந்திருக்கு. ஜோதீஷ் எட்டிப் பார்க்கலையே..! வரல்லையின்னாலும் போகட்டும்... குறைஞ்சது ஆறுதலா நாலு வார்த்தை ஃபோன்லயாவது பேச லாபமில்லையா... இதைத்தான் - தன் ரத்தம் - தன் சதையின்னு சொல்றாங்க போலிருக்கு...''

''இங்கே இருந்தப்ப எங்க மேலே எல்லாம் எவ்வளவு பிரியமா இருப்பான்... அத்தைக்கு வாய் விட்டுச் சொல்ல முடியலையே தவிர - சொந்தப் பிள்ளை இப்படி இருக்கறதுல அவளுக்குக் கழுத்து மட்டும் குறை...''

''என்னதான் அவங்க ஒருயிரும், ஈருடலுமாப் பழகினாலும் - பிள்ளைங்களாலே இப்ப - தனித் தனித் தீவாத்தானே ஆயிட்டாங்க...''

ஒவ்வொரு முறையும் அபர்ணா இப்படிச் சொல்லும் பொழுதெல்லாம் அவன் பிரமித்துதான் போவான்.

இக்கச்சின்னப் பெண்ணுக்குத்தான் எத்தனையெத்தனை கவலை... இத்தனை பேசுகிறாளே... ஒரு தடவை, - ஒரேயொரு தடவை கூட, தன் கண்ணுக்கு இப்படியொரு விபத்து நேர்ந்து விட்டதற்காகக் கலங்கவே இல்லையே...

ஆனந்துக்கு கல்லூரி என்று ஒன்று இருப்பதே மறந்து விட்டது. அபர்ணாவை காரில் வைத்து, காலையும் மாலையும் ஆஸ்பத்திரிக்குச் சென்று வர வேண்டியது. மிச்ச நேரங்களில் அரட்டை...

அவனுக்குப் பிடிக்காதது - அவள் அடிக்கடி டேப் ரிகார்டரில் அந்தக் குரலைக் கேட்பதுதான்...

பக்கத்தில் யாரும் இல்லை என்றால் - கேசட்டைச் சுழல விடுவாள். காலடிச் சத்தம் கேட்டால் நிறுத்தி விடுவாள்.

அன்று, அவனே கேட்டான்!

''இது.. இன்னமும் அவசியமா?''

''நோ. இது தானே இனிமே எனக்கு வாழ்க்கையே!''

''நீங்க வேற கல்யாணம் பண்ணிக்கறீங்களோ, இல்லையோ - அது, என் பிரச்னை இல்லை.. வாழ்க்கையில அனுபவிக்கறதுக்கு எத்தனையோ முக்கியமான விஷயங்கள் எல்லாம் இருக்கறச்சே - இறந்த காலத்தை நினைவுபடுத்தற இந்த அவஸ்தை எதுக்கு?''

அவள் பதில் சொல்லவில்லை... அவனது முதுகுக்குப் பின்னால் எங்கோ பார்க்கறாள்...

**ம**துரையில் - தில்லை காளிக்கு வெண்ணெய் சாற்றி விட்டுத் திரும்பிய கமலாவைப் பார்த்து, புன்னகைத்து கை குவிக்கிறார் அவர்.

''யாரு தெரியலையே...''

''அரசரடியில நர்ஸிங்ஹோம் பார்த்திருப்பீங்களே...''

''ஆமா... டுவென்டி ஃபோர் அவர்ஸ் நர்ஸிங்ஹோம்...''

''அதுவே... அந்த நர்ஸிங்ஹோம் டாக்டர்... அதை விட, உங்க வீட்டுக்காரரோட ஸ்டூடண்ட் மாதவன்னு சொல்லிக்கப் பெருமைப் படறேன்.

''அப்படியா... ரொம்பவும் சந்தோஷம்...''

''உங்க பையன் அப்படியே அவங்க அப்பாதான். அதுவும் இன்னொருத்தருக்கு உதவற சமயத்துல... எனக்கு அப்படியே என்னோட சாரே கண்ணுல வந்து நின்னார்னா பார்த்துக்குங்க...''

கமலாவின் குண்டு முகம், பூரிப்பில் பளபளக்கிறது.

''அவன் இங்கே வர்றதே அபூர்வம். எப்பப் பார்த்தீங்க..?''

''இப்பத்தான்.. பதினைஞ்சு இருபது நாளைக்கு முன்னால - கொடைக்கானல் போற வழியில ஆக்ஸிடண்ட் ஆன பொண்ணை அழைச்சிட்டு வந்தானே...''

''சீச்சீ... அவனாயிருக்காது அவனுக்கு அப்ப எக்ஸாம் டைம்...''

டாக்டர் புன்னகைத்தார்.

''உங்க மகனுக்கு - ஊருல இருக்கறவங்க எல்லாருக்கும் சேவை செய்யணும்னு இருக்கு. ஆனா அதே சமயத்துல ஒரு டாக்டராகித்தான் சேவை செய்ய முடியும்னு அவன் நினைக்கலே... எக்ஸாம் எழுதப் பிடிக்காமத்தான் கொடைக்கானல் வந்தாப்பல. வந்த இடத்துல ஆக்ஸிடன்ட் கேஸ்... அதை அப்படியே போட்டுட்டு ஓடறதுன்னா ஓடலாமில்லையா? தம்பி. அதையும் செய்யலை... அதுக்காக அவனைப் பாராட்டியே தீரணும். திட்டாதீங்க..''

டாக்டர் போய் விட்டார். கமலாவுக்குத்தான் அதற்கு மேல் இருப்பு

கொடுக்கவில்லை.

அந்தக் கணமே சென்னைக்குப் பறந்து போய் விசாரிக்க வேண்டுமென தேகம் பரபரக்கிறது.

எப்பொழுது சென்னை வருவதானாலும் - ஃபோன் செய்து விட்டுத் தான் கிளம்புவாள்.

அன்றும் அதுபோல ஃபோன் செய்ய - எடுத்தது மேல மாசி வீதிப் பெண்.

''ஆங்... இந்த நம்பருதான். யாரு வேணும் சொல்லுங்க...''

''முதல்லே நீ யாருன்னு சொல்லுடி...''

''என்னாத்தா... மரியாதை எல்லாம் தேயுது... நான் யாரு தெரியுமில்லே... மதுரைக்காரி... அநாவசியமா ஒரு சொல் பொறுக்க மாட்டேன். நீங்க யாருன்னு சொல்லுங்க. அப்புறம் பேசலாம்...''

''நானா... நானா... உன் மாமியார்!''

இப்படிச் சொன்ன கமலா, அதற்கு மேல் காத்திராமல் 'டொக்' வைத்து விட்டு, அந்தக் கணமே சென்னைக்குப் பயணப்படுகிறாள்.

''ஆனந்து, நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ தெரியாது. அந்தப் பொண்ணு அபர்ணா - சாப்பிடவே மாட்டேங்குது... எப்பப்பாரு பால் இருக்கா - ன்னு கேட்க வேண்டியது. கொண்டு போய்க் கொடுத்தா - அந்தப் பால் மாதிரி இல்லையேன்னு எதையோ நினைச்சிட்டு அழ வேண்டியது.''

''அப்படியா..?''

''என்ன அப்படியா..? நம்ம வீட்டுல அழைச்சிட்டு வந்து வச்சு வைத்தியம் பார்க்கறேன்னு, அவங்க அப்பா கிட்ட சொல்லியிருக்கே... வைத்தியம்தான் வேளா வேளைக்கு நடக்குதே தவிர - ஆகாரம் இறங்கக் காணும். அவங்க அப்பா முன்னாடி பொண்ணைக் கொண்டு போய் நிறுத்தினா - நீயும், நானும் முதுகுல டின் கட்டிக்க வேண்டியிருக்கும்...''

''நீ சாப்பாட்டுத் தட்டையும் ஸ்பூனையும் இங்கே கொண்டா சொல்றேன்.''

அவன் தட்டை வாங்கிக் கொண்டு அபர்ணாவின் எதிரில் உட்காருகிறான்.

''சாப்பிட மாட்டேங்கறீங்களாம்...''

''நோ... எனக்கு எதுவுமே பிடிக்கலை ஆனந்த்...''

''இப்படியின்னு சொல்லியிருந்தா நானே சமைச்சிருப்பேன் இல்லே?''

''சேச்சே... உங்களுக்கு என்னத்துக்கு சிரமம்?''

''சிரமமா... காலேஜுக்குப் போறதை விட, மத்ததெல்லாம் எனக்கு ரொம்ப ஈஸிங்க... இதோ இப்பவே பாருங்க... இடியாப்பம், குருமா இருக்குதே... என்ன மணம் பார்த்தீங்களா... நான், நானாவுக்கு இதை எப்படி, இத்தனை வாசனையா செயிறதுன்னு சொல்லிக் கொடுத்தேன்... கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்க... ஆ... அப்படித்தான்... நல்லா வாசனையா இருக்குதில்லே... ஒன்னுமில்லே... சமைச்சி முடிச்சதும், ஏதாவது பர்ஃபூமை ஸ்ப்ரே... ஸ்ப்ரே...

அவன், வாசலில் வந்து நின்ற அம்மாவைக் கண்டு திகைத்து நிற்கிறான்.




ஜம்புலிங்கத்துக்கு பிருத்வியின் மீது ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது.

'ஒரு காரியத்தை ஒழுங்காய் செய்யத் துப்பில்லை. இவனெல்லாம் என்ன மனுஷன்?'

'சந்தர்ப்பம் ஒரேயொரு முறைதான் கிடைக்கும். அதைப் புரிந்து கொண்டு உபயோகப்படுத்தத் தெரியாவிடில் அப்புறம் ஆயுசுக்கும் துரதிருஷ்டக் கட்டையாக கிடக்க வேண்டியதுதான்!'

அபர்ணா கழுத்தில் தாலி கட்டுவதற்கு முன்பே, பிருத்வியிடம் படித்துப் படித்துச் சொன்னார்.

''ஒரே கல்லுல ரெண்டு மங்கா அடிக்கணும் நீ... புரியுதா...?

''புரியுது...''

''இந்த விபத்து - ஏற்கனவே நடந்த கொலையை மறைக்கணும். புதுக் கொலைக்கு வழி வகுத்துக் கொடுக்கணும். அதே சமயத்துல உனக்கு லட்சங்களைப் பரிசாக் கொடுக்கணும்.''

''அது மட்டுமில்லே... இந்த கோடிக்கணக்கான சொத்துக்கு ஜம்புலிங்கத்தை விட்டா வேற யாரும் வாரிசு இல்லை... அப்படின்னு ஆக்கிடணும்...''

''சபாஷ். நீ புத்திசாலி. ஜாக்கிரதையா செய். எந்தத் தடயமும் விட்டுடாதே...''

''டேப்ரிகார்டர்..?''

''அது வேணும்... அதை நீ தனியாத் தூக்கிப் பள்ளத்தல போடு... போலீஸ் கையில கிடைச்சாலும், புது மணத் தம்பதிங்க பேசிட்டே போயிருக்காங்க. தூக்கக் கலக்கத்துல பாதைய விட்டு வண்டி இறங்கிடுச்சுங்கறதுக்கு அதுதான் புரூஃப்.''

எல்லாத்தையும் கேட்டுக் கொண்டவன், மகா புத்திசாலியாய் செய்வதாக நினைத்து செய்தவன் - காரில் அபர்ணா அமர்ந்திருந்த பக்கக்

கதவை - சரிவர சாத்தி, லாக் செய்ய வேண்டாமோ?

பள்ளத்தை நோக்கிப் பாயும் வேகத்தில் கார் கதவு திறந்து, கதவின் மீது சாய்ந்திருந்தவள் அப்படியே சரிய வேண்டுமா..?

காரோடு எரிந்து சாம்பலாகி இருக்க வேண்டாமோ? அதைத் தானே ஜம்புலிங்கம் விரும்பியது...



**அதிசயப் பெட்டி**

**வைடூரியம்**

**இது கிரே கலரில் இருக்கும். இதன் உள்ளே ஒரு கோடு தெரியும். இந்தக் கல்லை எந்தப் பக்கம் திருப்பி பார்த்தாலும் அந்தக் கோடே தெரியும் இதுவே அதன் சிறப்பு அம்சம். இதனை அணிந்தால் ஆன்மீகத்தை தூண்டும்.**

இப்பொழுது இன்னொரு முறை - இவளைக் கொல்ல தனிப்பட்ட முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஆளைத் தேட வேண்டும்.

பேசாமல், ஆனந்தே இதைச் செய்தால் அவனுக்கு மிகப் பெரிய அளவில், காரோ, வீடோ பரிசளித்து விடலாம் என்றுதான் பார்க்கிறார் ஜம்பு.

முடியவில்லை. காசுக்கு அடிபணிகிற ரகமாய்த் தெரியவில்லை... இப்படிப்பட்டவர்களிடம் உதவி கேட்பதை விட, சும்மா இருப்பதே நல்லது...

''இந்தத் தடியன் எங்கேயிருந்தாவது ஒரு போன் பண்ணக் கூடாது?'' அவர், தனக்குத் தானே பேச, ஜகதாவின் செவிகளில் அது விழ...

''நீங்க யாரைச் சொல்றீங்க..?''

''ஆ...ஆ....''

ஒரு கணம் திணறி விட்டார் ஜம்புலிங்கம்.

''எல்லாம் இந்த ஜோதிஷ்வரைத் தான் சொல்றேன். கல்யாணத்துக்குத்தான் வரலை. கூடப் பொறக்காத பொறப்பா - இவன் கூடவே நகமும் சதையுமா வளர்ந்தவன்... இப்படி அநியாயமாப் போயிட்டானே... அதைத்தான் சொல்லிட்டிருந்தேன்... ஒரு போனாவது பண்ணக் கூடாதான்னு...''

ஜகதா பொல பொல வெனக் கண்ணீர் விட்டாள். என்னதான் இரண்டு குழந்தைகளும் நம் குழந்தைகள்தான் என்று வளர்த்தாலும் - இந்த மாதிரி சமயங்களில் பேதம் தலைத்தூக்கத்தானே செய்கிறது?

''உன் மகன் அமெரிக்காவுல எவளோ ஒருத்திய கட்டிட்டு நல்லா இருக்கான்.''

''அவன் கட்ட வேண்டியவளை இவன் கட்டிட்டு கண்ணை மூடிட்டான். நஷ்டம் யாருக்கு?''

ஜகதாவிற்கு கணவனைப் பார்க்கையில் பரிதாபமாக இருக்கிறது.

''இதப் பாருங்க... நடந்தது நடந்தாச்சு. இனிமே அதையே நினைச்சிட்டிருக்கிறதுல என்ன இருக்கு? அமெரிக்காவுக்கு ஒரு ஃபேக்ஸ் கொடுத்திருக்கீங்களா?''

''ஒன்னு என்ன ஒம்பது தடவை கொடுத்தாச்சு. ஆள் இருந்தாத்தானே...''

''இல்லாம எங்கே போயிட்டான்?''

''புதுப் பொண்டாட்டியோட எங்கே ஊர் சுத்தப் போனானோ... அவனை அடக்கி வளர்க்காமப் போனதோட பாவத்தை இப்ப அனுபவிக்கிறேன்...''

இதற்கு மேலும் அவளுடன் பேச விரும்பாத ஜம்பு தனியே போய் அமர்ந்து அபர்ணாவை முடிப்பது எப்படி என்று தீவிரமாக [illegible]

நடு நடுவே - பிருத்வி இப்படி - அரை குறையாக முடித்து விட்டு பணத்தை மட்டும் மொத்தமாய் லாவிக் கொண்டு போனதைப் பற்றி மனசுக்குள் அங்கலாய்க்கிறார்.

ஜகதாவின் கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியவில்லை... அவளை மணந்த இந்த இருபத்தியைந்து வருஷத்தில் - ஒரு நாள் கூட, அவளைக் கடிந்து கொண்டதில்லை.

இப்போதோ - கோபம் கோபமாக வருகிறது.

''கொஞ்சம் சும்மா இரேன். நானும் அமெரிக்கன் எம்பஸியில விசாரிக்க சொல்லியிருக்கேன். அங்கே இருக்கிற அவன் ஃபிரண்ட்ஸுக்கெல்லாம் லெட்டர் போட்டிருக்கேன். இன்னும் என்ன செய்யச் சொல்றே?''

ஜகதா முகம் வாடிப் போய் விட்டாள்.

'பிள்ளைகள் விளையாடப் போய், ஒருவன் திரும்பி வந்து - மற்றவன் வராமலிருந்தாலே பதறிப் போகிற மனிதர், இப்படிச் சொல்கிறாரென்றால்...'

'இருக்காதா பின்னே...'

'அவர் தன் மகனை முழுசாய் எமனிடம் தூக்கிக் கொடுத்து விட்டு நிற்கிறார். மறுபடி பிள்ளையைக் கண்ணால் காணவே போவதில்லை என்கிற துக்கம் எத்தனை பெரியது...'

'அப்படிப் பட்டவரிடம் போய் - திமிரெடுத்து எவளோ ஒரு அமெரிக்கப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு குடும்பத்தோடு சம்பந்தமே இல்லாமல் இருப்பவனைப் போய் தேடுங்கள் என்றால்...'

ஜகதா பெருமூச்செறிகிறாள்.

'இவரா இருக்கக் கொண்டு இத்தனையையும் தாங்கறார்., வேற

யாராவதா இருந்தா - இந்நேரம் பைத்தியம் பிடிச்சிருக்கும்.'

ஜம்புலிங்கத்தின் நினைப்பெல்லாம் - இந்தப் பெண் அபர்ணாவையே சுற்றியிருக்க-

அவருக்கு மட்டும் லட்டு மாதிரி ஒரு சந்தர்ப்பம் வருகிறது...

கைகால் சரியில்லாமல் படுக்கையிலேயே கிடந்த விநாயகத்தின் நிலைமை படுமோசமாகிறது.

''இனிமேல் தாங்காது. தந்தி கொடுத்து பெண்ணை வரவழைக்க வேண்டியதுதான்...''

''அவளுக்கே கண் பார்வை இன்னும் வரலை டாக்டர்... அங்கே சிகிச்சை...''

''இருக்கட்டுமே... அவளுக்கு கண் இல்லையின்னாலும் பெரியவருக்கு மங்கலாவாவது தெரியுது இல்லையா... கடைசிக் காலத்துல பெண்ணைப் பார்த்துடட்டும்...''

டாக்டர் சொன்னதை வேதவாக்காவே எடுத்துக் கொண்டு - சென்னைக்கு எஸ்டிடி போட்டுப் பேசுகிறார்.

''யாரு... ஆனந்தா?''

''ஆமா சார். உங்க மருமக நல்லாயிருக்காங்க.. ட்ரீட்மெண்ட் நடந்திட்டிருக்கு... எங்க அம்மா கூட ஊருல இருந்து வந்திருக்காங்க...''

அவர், அவை எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''ஆனந்த், அபர்ணாவையும், வேலைக்காரியையும் இன்னிக்கு ராத்திரியே ரயிலேத்தி விடு... அபர்ணா அப்பாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாயிருக்கு. அவளைப் பார்க்கணும்கறாரு...''

''பாதி வைத்தியத்துல எப்படி சார்..?''

''ஒரு பத்து நாள்தானே... மருந்து, மாத்திரைகளை எழுதிக் கொடுத்திடு... நான் இருக்கேன்; அவங்க அத்தை ஜகதா இருக்கா... அதெல்லாம்... எங்க குழந்தைய நாங்க அத்தன கூட கவனிப்பில்லாம விட்டுடுவோமா என்ன...''

-இதைச் சொல்லும் போதே ஜம்புலிங்கத்தின் சுறுசுறுப்பான மூளை வேகமாக வேலை செய்கிறது..

மற்றுமொரு அருமையான சந்தர்ப்பம்... 'அபர்ணா கொண்டு வரும் மாத்திரைகளுக்குப் பதிலாக - மெள்ள மெள்ளக் கொல்லும் மாத்திரைகளை வேளை தவறாமல் கொடுத்து வந்தால்-'

'ஒரே மாதம் போதும்... அபர்ணாவைக் காற்றில் கரைக்கலாம்...'

ஜகதாவைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. ஏற்கனவே நோயாளி. இன்னும் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கப் போகிறாள்...

மகனும் அமெரிக்காவோடு ஐக்கிமாகி, கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த அபர்ணாவும் போய், கூடப் பிறந்தவனையும் வழியனுப்பிய பின் - அவள் மட்டும் இருக்கவா போகிறாள்...

ஜம்புலிங்கம் அன்று உற்சாக மூடில் இருக்கிறார். மனைவியிடம் கூட அன்பாகப் பேசுகிறார்:

''நாளைக்கு அபர்ணா வரப் போறா.... அவளுக்கு நீதான் தைரியம் சொல்லணும். ஆமா...''

ஜகதா மௌனமாய் தலையசைக்கிறாள்.

மறுநாள்-

காலையில் அபர்ணாவை வரவேற்க அவரே ஸ்டேஷனுக்குப் போகிறார்.

பெட்டி படுக்கைகளை வேலைக்காரி எடுத்து வைக்க - அபர்ணாவின் கையைப் பிடித்து இறங்கும் பெண்மணி... யார்?

இவளை எங்கே பார்த்திருக்கிறோம்?

அவருடைய சந்தேகத்தை வேலைக்காரி தீர்த்து வைக்கிறாள். ''அம்மா ஆனந்த் அய்யாவோட அம்மாங்க... சின்னம்மாவுக்குத் துணையா வந்திருக்காங்க...''




கமலா, மகனைப் பார்க்கப் போன போது தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையானாலும், படிக்காமல் ஊரைச் சுற்றும் பிள்ளையின் முதுகில் நாலு சாத்து சாத்த வேண்டும் என்கிற குமுறலுடன்தான் போய் இறங்கினாள்.

ஆனந்தும், நாணாவும் அவளைப் பார்த்ததும் அலறியே விட்டார்கள்.

''என்னம்மா இது, சொல்லாமக் கொள்ளாம வந்துட்டீங்க?''

''நான் என்னிக்குடா சொல்லிட்டு வந்திருக்கேன்? அதாருடா என்னோட போன்லே மரியாதை இல்லாமப் பேசினது...''

நாணா குழைந்து, குழைந்து பதிலளித்தான்.

''அது வந்து... வேற யாருமில்லேம்மா... நம்ம சின்னம்மாவோட வேலைக்காரி''

''என்னது... சின்னம்மாவா?''

கமலா, அந்த கணமே பெரிசாய் ஒப்பாரி வைக்கக் கிளம்பி விட்டாள். நல்ல வேளை... ஓடி வந்த ஆனந்த் தடுத்தான்.

''அம்மா... அபர்ணான்னு ஒரு பொண்ணும்மா... அவளுக்கு சின்ன வயசுல இருந்தே ஒரு வேலைக்காரி. அவ, தன் எசமானிய சின்னம்மான்னு கூப்பிடுவா அப்ப - பெரியம்மா யாரோ எங்கேயோ இருக்காங்கன்னு அர்த்தம்.''

''வேற எங்கேயோ இல்லை; மதுரையிலத்தான்...''

''என்னடா சொல்றான் இவன்?''

''அவன் வார்த்தைய நீ நம்பாதேம்மா. என்கிட்டே இவன் நிஜம் சொல்லியிருக்கான்... சின்ன வயசுல குலேபகாவலி சினிமாப் பார்த்துட்டு சுவரேறிக் குதிச்சவன்தானே. அப்புறம் மாவடு ஜாடியை உடைச்சிட்டு எனக்கு எதுவுமே தெரியாதுன்னு சாதிக்கலையா. அவனை நம்பவே நம்பாதே. நான் சொல்றதைக் கேளு...''

''சொல்லு...''

ஆனந்த், அபர்ணாவின் கதையை, கல்லும் கரையும் படியாகச் சொல்கிறான்.

கமலா, பார்ப்பதற்குத்தான் தடபுடலாய் சத்தம் போட்டுக் கொண்டிருப்பாளே தவிர - மனசு குழந்தை மனசு. சினிமாவில் சோகக் காட்சி வந்தாலே பிழியப் பிழிய அழுவாள்.

அபர்ணாவைக் கண்டதும், பெற்ற மகளைப் பார்ப்பது போல - ஒரே கொஞ்சல்தான். சீராடல்தான்.

தான் வம்சவம்சமாய் டாக்டர் பரம்பரையில் வந்த டாக்டரை மணந்தவள் என்கிற ஹோதாவை மட்டும் அடிக்கடி காட்டுவாள்.

''இந்தா நாணா... அபர்ணா பெட்டை மாத்து...''

''அடடா... அழறா பாரு... முந்தானையாலேயே கண்ணைத் துடைச்சிக்கறா... ஆனந்த், என்ன நீ.... டாக்டருக்குப் படிக்கறே... இதையெல்லாம் பார்த்துட்டு நிக்கறே?''

''நான் துடைச்சு விட்டா, அவ தப்பா நினைச்சுப்பாம்மா... நீ வேணா கேட்டுப் பாரு...''

''ஐயோ ராமா... ஸ்டெரிலைஸ்டு காட்டன்... இல்லே துணி கொடு... கண்ட துணியாலே கண்ணைத் துடைச்சிட்டா என்ன ஆறது...''

''இந்தா... வாழ்க்கையில; விபத்தா 'வந்ததை 'விபத்தாவே ஒதுக்கணும். ஏதோ இந்த மட்டும் ஆச்சே... உனக்கென்ன ராஜாத்தி மாதிரி இருக்கே... 'ஜம்' முனு வேற கல்யாணம் பண்ணிக்க. எங்க ஆனந்துக்கே உன்னை செஞ்சு வைக்கறேன்...''

''அம்மா...''

''என்னடா...''

''அப்படி ஏதாவது பிளான் இருந்தா, அவளோட கண் ஆபரேஷனுக்கு முன்னாடி பண்ணிடு. அப்புறம், அவளுக்கு பார்வை வந்ததுக்கு அப்புறம் ரொம்ப வருத்தப்படுவா... இந்த மூஞ்சியை கட்டிட்டோம்னு...''

சின்னச்சின்ன வெள்ளி மணிகளை உருட்டி விட்டாற் போல அபர்ணா சிரிக்கிறாள்.



கமலாவும் கூட அந்த சிரிப்பையே நிரந்தரமாக்க வேண்டும் என்று தான் விரும்பினாள்...

ஆனால் - அபர்ணா எந்த நிமிஷம் சிரிப்பாள் - எப்பொழுது சோர்ந்து போய் உட்காருவாள் என்றே தெரிவதில்லையே...

ஒரு முறை - அவளது டேப் - ரிகார்டரில் இருந்த கேசட்டை காணோம் என்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள். வீடு முழுக்க, தலை கீழாகப் புரட்டப்பட்டது. கடைசியில் கோவிலுக்குப் போய் திரும்பிய கமலாதான் - அந்த கேசட்டை அலமாரியின் மேல் தட்டிலிருந்து எடுத்துக் கொடுக்கிறாள்...

''இதை ரெண்டு நாளாவது கேட்காம இருக்கக் கூடாதான்னுதான் எடுத்து வச்சேன்...''

''என்னால முடியாது.. என்னால முடியாது...''

அபர்ணா அழுத அழுகையைப் பார்த்து விட்டு கமலா அரண்டு போய் விட்டாள்.

''இந்தப் பொண்ணை எப்படிடா சமாதானப் படுத்தறது?''

''அதுதாம்மா எனக்கும் தெரியலை...''

ஆனந்த் வருத்தமுடன் சொல்லுவான்...

இப்பொழுது அபர்ணாவின் துயரத்தை அதிகரிக்கச் செய்வதாய் ...ரிலிருந்து செய்தி வேறு...

''அப்பாவுக்கு உடல் நிலை மோசம்...''

அபர்ணா, தன்னுடன் வந்துள்ள வேலைக்காரியின் துணையுடனேயே ...துரை போவதாகத்தான் சொல்கிறாள். கமலாதான் ஒத்துக் ...கொள்ளவில்லை.

''அது எப்படி... ஏற்கனவே கண்ணுல பட்டிருக்கற அடி போதாதா? ...யில்லே ஏறி இறங்கறதுங்கறது ரெண்டு கண்ணும் முழுசா இருக்கறவங்களாலேயே முடியலே. நானும் வர்றேன். உனக்கு வேளா ...வளைக்கு மருந்து மாத்திரை கொடுக்கணும்...''

''அத்தை இருக்காங்க...''

''இருந்தாப்பல ஆச்சா? அவங்களுக்கு எத்தனை டென்ஷன்? வளர்த்த ...பிள்ளையப் பறிகொடுத்து, சொந்தப் பிள்ளைய தாரை வார்த்து, இப்ப ...ண்ணாவுக்கும் உடம்பு ஜாஸ்தின்னா ஒரு மனுஷி என்ன ...ண்ணுவா? முதல்லே - அவளுக்கு ஏதாவது லைட்டில் கொடுத்து ...ங்கச் சொல்லணும். நீ பேசாம இரு... மதுரை என்ன, எனக்குப் புதுசா? ...ங்க வம்சமே மதுரைதான்...''

ஜம்புலிங்கம்தான் இந்த சின்ன மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை... ...தே சமயத்தில் கமலாவை எசகு பிசகாய் எப்பொழுதோ பார்த்தாற் ...பாலவும் இருக்கிறது. நினைவுக்கு வரவில்லை. வயசானதினால்

பாழாய் போன மறதி.

அவர், அவளை அப்படியே சுழற்றிவிடப் பார்க்கிறார்.

''ரொம்ப தாங்கஸ். இந்த காலத்துல இப்படி யாருங்க தானே முன் வந்து ஒத்தாசை செய்யறாங்க..? உங்களை எங்கே இறக்கி விடணும்?''

''இறக்கி விடறதாவது? நான் அபர்ணாவோட வந்திருக்கேன். இந்த நிலைமையில அவளுக்கு ஒரு பாடிகார்ட் அவசியம்.''




### புஷ்பராகம்

இதில் இரண்டு வகை உள்ளது. வெள்ளை புஷ்ப ராகம், கனக புஷ்பராகம். வெள்ளை புஷ்ப ராகம் அசல் வைரம் கலரில் இருக்கும். கனக புஷ்ப ராகம் ஒரு கண்ணாடி குவளைத் தண்ணீரில் ஒரு ஸ்பூன் மஞ்சள்தூள் போட்டு கலக்கினால் வரும் வண்ணம் போல் இருக்கும். கனக புஷ்ப ராகம் அணிந்தால் தான் மிகவும் சிறந்தது.

''அதான் நாங்க இருக்கோமே! வீடு கொள்ளாம வேலைக்காரங்க இருக்காங்க...''

''நோ, நோ.. உங்களுக்கு ஏற்கனவே ஒரு பேஷண்ட்டை கவனிக்க வேண்டிய வேலை இருக்கு. அபர்ணா விஷயத்தை நாம சாதாரணமா எடுத்துக்கக் கூடாது... இப்ப வீட்டுல வேலைக்காரங்களே இருக்காங்க... பன்னெண்டு மணிக்கு அந்த சிவப்பு மாத்திரையில ஒண்ணை எடுத்துக் கொடுன்னு நீங்க சொல்லிடுவீங்க... அது அவளோட மாத்திரையாத்தான் இருக்கும்னு என்ன நிச்சயம்? உங்களுதா இருக்கலாம்; உங்க மிஸஸ்தா இருக்கலாம்; இல்லே, படுக்கையில் உயிருக்குப் போராடற இவ அப்பாவோடதா இருக்கலாம். அன்எஜுகேட்டட் ஸர்வென்ட்ஸை எப்பவும் நர்ஸிங்குக்கு அனுமதிக்க கூடாது...''

ஜம்புலிங்கத்தின் பொறுமையெல்லாம் வியர்வையில் கரைந்து கொண்டிருக்கிறது.

''நான் வேணுமானா ஒரு நர்ஸையே போடறேனே!''

''ஆயிரம் நர்ஸ் வந்தாலும் ஒரு மாமியாருக்கு இணையாகாது மிஸ்டர் ஜம்புலிங்கம்!''

''என்ன சொல்றீங்க..!?''

''மகனை இழந்திட்டு தவிக்கிற உங்க கிட்ட இப்ப கல்யாண விஷயம் பேச வேண்டாமேயின்னு இருந்தேன். முடியலை... இவ அப்பாவுக்கு நினைவு இருக்கறப்பவே இது பத்தின நல்ல செய்தியை அவர் காதுல போட்டுடலாம் இல்லையா... அதுக்காகவும் சேர்த்துத்தான் நான் இப்ப உங்க கூட வர்றேன்...''

''சந்தோஷம்.. சந்தோஷம்...''

இதற்கு மேல் என்ன சொல்வார் அவர்...

கமலா சொன்ன விஷயம் விநாயகத்துக்கு மட்டுமல்ல - ஜகதாவுக்கும் ஆச்சரியத்தைத்தான் தருகிறது.

அபர்ணா அருகில் இல்லாத போது - ஜகதா, அபர்ணா - பிருத்வி கல்யாண ஆல்பங்களைக் கொண்டு வந்து காட்டுகிறாள்...

''எத்தனையோ விமரிசையா நடந்தது. இப்படி ஆகும்னு நினைக்கவே இல்லையே...''

ஜகதாவிடமிருந்து ஜோதிஷ்வரின் அமெரிக்க விலாசத்தை வாங்கிக் கொண்ட கமலா, அங்கிருந்த கல்யாண ஆல்பத்தையும் எடுத்து வைத்துக் கொள்கிறாள்.

என்ன காரணத்தினாலோ ஜம்புலிங்கத்தின் முகத்தை மறுபடி மறுபடி பார்க்க வேண்டும் போல இருந்தது.




இப்படி நடுத்தெருவில் நிறுத்து வாள் என்று பிருத்வி நினைக்கவே இல்லை. லாவண்யா இவனை சுத்தமாக மறந்து போய் விட்டாள்.

மொத்தப் பணத்தையும் எழுதி வாங்கிக் கொண்டாயிற்று-

''பதினைந்து லட்சத்தில் வீடு கட்டலாம்'', என்றான் அவன்...

''போதாது... ஒரு டிராயிங் ஹாலே எனக்கு பத்து லட்சமாகும்...''

''கொஞ்சம் குறைச்சு கற்பனை செய்..''

''ஒய்? எனக்கு எல்லாமே பெரிசு பெரிசா கற்பனை செஞ்சுதான் பழக்கம். அல்ப புத்தி எனக்குக் கிடையாது...''

''அப்ப எனக்கு அல்ப புத்திங்கறியா?''

''உனக்கில்லே....உங்க அப்பனுக்கு...''

''ஷ், சும்மா அந்த ஆளை இதுல சம்பந்தப்படுத்தாதே... முப்பது லட்சம் தூக்கிக் கொடுத்தானேடி, எவன் கொடுப்பான்?''

''ஏன்... சும்மாவா தந்தான்? அவனுக்காக நீ என்ன செய்யலை? கொலையே செஞ்சிருக்கியேய்யா... முப்பது லட்சம் - பகோடா பொட்டலம் வாங்கக் கூட காணாது.''

''சரி... வட்டிக்கு விட்டு சாப்பிடுவோம். வீடெல்லாம் அப்புறம் கட்டிக்கலாம். உனக்குப் பிடிச்ச மாதிரி பெரிய மாடர்ன் பங்களாவா வாடகைக்கு எடு. கட்டினாத்தான் வீடா?. கட்டாதவனுக்கு எல்லா வீடுமே அவன் வீடுதான்...''

அவன் சொன்னபடி அல்ட்ரா மாடர்ன் பங்களாதான். மும்பையில் வளைக்கு ஒரு பார்ட்டி... பொழுதுக்கு ஒரு அலங்காரம்... மொத்த பணத்தையும் அவளிடமே கொடுத்து விட்டதால் - சிகரெட்டுக்குக் கூட அவளிடம் கையேந்த வேண்டிய நிலைமை.

பிருத்வியும், பல்லைக் கடித்துக் கொண்டுதான் போகிறான். இருந்தாலும் ஒவ்வொரு சமயம் தாங்க முடிவதில்லை. கத்துகிறான்.

''வெளியில போகத்தான் போனியே. எனக்கு வீட்டுல ராத்திரி
சாப்பாடு செய்யச் சொல்லிட்டுப் போகக் கூடாதா வேலைக்காரி கிட்ட?
அவ, மதியச் சோறை எடுத்து வைக்கறா...''
''நான்தான் போதும்னு சொன்னேன். வீட்டுல்தானே இருக்கீங்க...
இதுக்கு மேல ராத்திரி வேளையில, சாப்பிட்டா ஜீரணமாகாது...''
''எனக்கு ராத்திரி சாப்பிட்டா ஜீரணமாகாது. ஆனா அதுவே இந்த
பங்களா சொந்தக்காரர் - என்னை விட இருபது வயசு பெரியவர்...
அவருக்கு - நைட் டின்னர் ஒத்துக்கும் இல்லையா...?''
''விஷயத்தைத் தெரிஞ்சு வச்சிட்டுத்தானே கேட்கறீங்க... ஆமா,
அப்படித்தான். நீங்க என்ன செய்வீங்களோ செஞ்சிக்குங்க...''
''என் பணத்தைக் கொடு. நான் எங்கேயாவது போய்த்
தொலையறேன்...''
''பணமா... இந்த வீட்டுக்கு அட்வான்ஸ்... தவிர வாடகை, நீ
ரேஸ்லே தோற்றது; சினிமா எடுக்கறேன் பேர்வழியின்னு ஒரு நாள்
பூஜை போட்டு, ஏதோ இந்தி நடிகையோட நாலு நாள் கும்மாளம்
போட்டது... இத்தனைக்கும் நானே கைய விட்டு ஏழு லட்சம் செலவு
பண்ணியிருக்கேன். இத்தனை நாள் பழகின தோஷத்தாலே நான் எதுவும்
கேட்கலை. இப்ப கேட்கறேன். பணத்தை வச்சிட்டு வெளியில போ...''
லாவண்யா கூசாமல் சொல்கிறாள்.
கையில் வறட்சி ஏற்பட்டதும் அவனுக்கு ஜம்புலிங்கம்தான்
நினைவில் வந்து நிற்கிறார்.
அவருக்கு போன் செய்யும் போதே நடுக்கம்தான் - ஜகதாவோ,
வேலைக்காரர்களோ தன் குரலை அடையாளம் கண்டு கொண்டு
விடப்போகிறார்களே என்று...
அவன் நல்ல காலமோ, போறாத காலமோ - ஜம்புலிங்கமே
பேசினார்.
''நீயா..?''
''ஆமா.. எப்படியிருக்கீங்க?''
''குசலம் விசாரிக்கறது எல்லாம் அப்புறம். ஏண்டா, ஒரு காரியத்தை
ஒப்படைச்சா, ஒழுங்கா செய்யத் தெரியாது..?''
''ஏன்... என்ன ஆச்சு?''
''அபர்ணா இருக்கா...''
''என்னது..!?''
''அவ இருக்காங்கறேன். இன்னும் புதுசு புதுசாப் பிரச்னை எல்லாம்
தலைகாட்டிட்டு இருக்கு. இப்போதைக்கு நீ - ஸௌத் பக்கமே வராதே-
''எனக்கு அவசரமாப் பணம் வேணுமே!''
''எங்கேயாவது குட்டிச் சுவராப் பார்த்து முட்டிக்க. எல்லாத்தையும்
அந்தப் பொண்ணு கிட்ட கொடுத்திட்டே இல்லே? அவ்வளவுதான். உ
ராஜா வாழ்க்கை முடிஞ்சது. எங்கேயாவது போய் கார் கழுவு. பெட்ரோ



போடு. டிரைவரா இரு. இதுக்கு மேல என் கூட்ட இருந்து நயா பைசா
புரளாது...''
''இது உறுதியின்னா - நான் உங்க மனைவிகிட்ட நிஜத்தை சொல்ல
வேண்டியிருக்கும்...''
''நீ சொல்ற வரைக்கும் அவ இருக்கமாட்டா... நினைப்புல
வச்சுக்க...''
அவரது இந்த வார்த்தை - பிருத்வியை பலமாகவே தாக்கி விட்டது.
லாவண்யாவின் சுபாவம் தெரியத் தெரியத்தான் அபர்ணாவின்
அருமையே புரிகிறது.
அவளை மணந்ததற்கு - நிம்மதியாய் அத்தனை சொத்துக்களையும்
ஆண்டு கொண்டு அருமையாய் வாழ்ந்திருக்கலாம்.
இப்பொழுது நினைத்து வருத்தப்பட்டு என்ன பயன்...
அவனால் மதுரைக்கும் போக முடியாத நிலை. லாவண்யா, தன் காலில்
போட்டிருக்கும் செருப்பை விடவும் கேவலமாக நினைக்கும் பொழுது
இங்கே இருந்து குப்பை கொட்டுவதை விடவும் - எப்படியாவது
சென்னைக்குப் போய் - ஜகதாவை யார் மூலமாவது எச்சரித்து...
யார் மூலமாவது என்ன...
அபர்ணாவின் மூலமாகத்தான்...
நான் போனால் அவள் ஏற்றுக் கொள்ள மாட்டாளா என்ன... கணவனே
கண் கண்ட தெய்வம் என்கிற ரகம்தானே அவள்...




**அ**வன் சென்னைக்கு வந்ததும் முதல் வேலையாய் மதுரைக்கு மீண்டும் தொடர்பு கொள்கிறான்.
''அம்மா இருக்காங்களா..?''
''இல்லையே... வெளியே போயிருக்காங்க...''
''எப்ப வருவாங்க..?''
''தெரியலையே... நீங்க யாரு...''
''பேரு சொன்னா உங்களுக்குப் புரியாதுங்க, அபர்ணாம்மா
இருக்காங்களா..?''
''அவங்க மெட்ராஸ்லே இல்லே இருக்காங்க... அவங்க அப்பா
செத்துப் போனதுக்கு வந்தாங்க. இப்ப மறுபடி மெட்ராஸுக்கு...
அய்யாதான் இருக்காங்க.... கூப்பிடட்டுமா..?''
''டொக்''
அவன் ரிஸீவரை வைத்து விட்டான். ஜம்புலிங்கத்துடன் பேச
வேண்டும்தான். ஆனால், அதற்கு இது நேரமில்லை.
அவன் பெருகும் வியர்வையைத் துடைத்தபடி கடையை விட்டு
றங்க...

அவன் காலடியில் ஏதோ வந்து விழுகிறது... குனிந்து எடுக்கிறான்.

கேசட்!

''என்ன அபர்ணா, கை தவறிடுச்சா..?''

அவன் திடுக்கிட்டு நிமிர்கிறான்...

அபர்ணா... கூட அந்த ஆள் யார்..?

''தாங்க்ஸ்!''

அந்த மனிதன், பிருத்திவியின் கையிலிருந்த கேசட்டை வாங்கி, அபர்ணாவின் கையில் கொடுத்து மெள்ளக் காரிலேற்றுகிறான்.



## அஞ்சறைப் பெட்டி

**ந**வரத்தினக் கற்கள் போட நினைப்பவர்கள், தானாக வாங்கி அணியக் கூடாது. தங்களின் ஜாதகத்தைப் பார்த்து, அதில் குறிப்பிடும் கற்களை மட்டுமே அணிய வேண்டும். தங்களது ஆசைகளுக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் அணியக் கூடாது.

அவள் - பரபரப்புடன் தன் கையிலிருந்த கேசட்டை, டேப் ரிகார்டரில் போட்டுப் பார்க்கிறாள்...

''............... என்ன நீ இவ்வளவு தூங்கு மூஞ்சியா இருக்கே? டிரைவர் ஸீட்டுக்குப் பக்கத்துல உட்கார்ந்து நீ தூங்கக் கண்ணம்மா... கூடாது...''

அபர்ணா, பொத்தானை அழுத்துகிறாள். பேச்சு நின்றது.

''நல்ல வேளை... டேப் ரிகார்டர் கீழே விழுந்து, கேசட் தனியாத் தெறிச்சிருக்கு போல இருக்கு. ரிப்பேராயிடுச்சோன்னு நினைச்சேன். கேசட்லே சிக்கல் விழுந்துடுச்சுன்னா வார்த்தையே அழிபட்டுடும்...''

பிருத்வி, பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அவள் கைகள்தான் எத்தனை பாசத்துடன், டேப்ரிக்கார்டரை நீவி விடுகிறது...

''வா... போகலாம்...''

நகர்ந்த ஆனந்த், பிருத்வியை ஏற இறங்கப் பார்க்கிறான்.

''யாருப்பா நீ..? என்ன வேணும்..?''

பிருத்வி, கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கிறான்.

என்ன வேணும் என்று சொல்வான்? 'உன் பக்கத்திலுள்ள பெண் என்னுடையவள். எனக்கு அவள் வேண்டு'மென்று சொல்வானா.. எப்படிச் சொல்வான்?

''அடடா... நீ என்ன ஊமையா?''

ஆனந்த் கேட்டதும், 'சட்'டெனத் தலையாட்டி விடுகிறான் பிருத்வி.

வாயைத் திறந்து பேசினால் - அபர்ணா, தன் குரலை அடையாள கண்டு கொள்வாள்.

எத்தனை நாட்களாக, எத்தனை தடவைகளாக அவள் அந்தக் குரல டேப் ரிகார்டரில் போட்டுப் போட்டுக் கேட்டிருக்கிறாளோ...

''கேட்கறேனே... காதுல விழலை போல இருக்கு... நீ என்

மறுபடியும் ஆனந்த் கேட்க, பலமாகத் தலையாட்டிய பிருத்வி, அவனை நகர்ந்து கொள்ளச் சொல்லி, தானே காரை ஓட்டி வருவதாகவும், வயிற்றுப் பாட்டுக்கு வேறு வழியில்லை என்றும் சொல்ல-

ஆனந்த், அபர்ணாவின் தோளைத் தொட்டு தள்ளிக் கொண்டு போய் அவளிடம் யோசனை கேட்கிறான்...

''பார்த்தா பாவமா இருக்கு அபர்ணா...''

''நான்தான் பார்க்கலையே. பரவாயில்லே. நீங்க சொன்னா சரி...''

பிருத்வி, மறுபடியும் டிரைவர் ஸீட்டில் ஏறுகிறான்.

''**ப**லே பலே... கடைசியில அங்கேயே வேலைக்கு வந்து சேர்ந்துட்டியா.? நீ புத்திசாலிங்கறது எனக்குத் தெரியும். உனக்கு மறுபடியும் ஒரு சான்ஸ் கிடைச்சிருக்கு. அவளைத் தீர்த்துடு. இருபத்தஞ்சு லட்சம் தர்றேன்.''

ஜம்புலிங்கம் மிக உற்சாகமாகப் போனில் பேசிக் கொண்டிருக்க, சத்தமின்றி பின்னால் வந்து நிற்கிறாள் ஜகதா...

பேசிக் கொண்டே திரும்பியவருக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி.

அவசரமாய் ரிஸீவரை வைக்கிறார். ஆனால் அவளோ - மிக நிதானமாய் பேசுகிறாள்.

''யாரோடயோ பேசிட்டிருந்த மாதிரி இருந்தது...''

''இல்லே... ஆமா... நம்ம ரேஸ் குதிரை ஒண்ணு கால் முடங்கிடுச்சு. அதான் தீர்த்துடுன்னு சொல்லிட்டிருந்தேன்...''

''அதுக்காகவா இருபத்தஞ்சு லட்சம் தரப் போறீங்க..?''

''அதுக்கில்லே ஜகதா... புதுசா ஒரு குதிரைப் பண்ணை வைக்கலாம்னு... நீ என்ன சொல்றே?''

''நான் ஒண்ணும் சொல்லப் போறதில்லேங்க. எதுவானாலும் ஜோதீஷ்வர் வந்தாத்தான்...''

''அந்த படவா ஒரு லெட்டரும் போடல்லே... ஒண்ணுமில்லே. என்ன பண்றான்னே தெரியலையே!''

''எனக்கு நிச்சயமாத் தெரியும். ஜோதீஷ் அமெரிக்காவுல இல்லே. அவன், அமெரிக்காவுல 'எவளையும் லவ் பண்ணிக் கல்யாணம் செஞ்சுக்கலை. தனியாத்தான் இருந்தான். அவன் எனக்கு லெட்டர் போட்டானோ இல்லையோ... எனக்குத் தெரியாது. ஆனா பிருத்வி - அபர்ணா கல்யாணம் அவனுக்கு ரொம்ப ஷாக்கா இருந்திருக்கு. அவன், இதைப் பத்தி, தன் ஃப்ரண்ட்ஸ் கிட்ட எல்லாம் சொல்லி அழுதிருக்கான். கல்யாணத்துக்கு முதல் நாள் - மெட்ராஸ்லேதான் இருந்திருக்கான். குழந்தை அவசர அவசரமா என்னைப் பார்த்து விஷயத்தைத் தெரிஞ்சுக்கணும்னே ஓடி வந்திருக்கான். அவன் எங்கே..? அவனை என்ன பண்ணினீங்க..?''

கடைசி வரியை முடிக்கும் போது அவள் குலுங்கிக் குலுங்கி அழுதே
விட்டாள்.
ஜம்புலிங்கம் தலையில் அடித்தாற் போல் சிறிது நேரம் நின்றார்.
ஜம்புலிங்கம் ஜகதாவின் கழுத்தை இறுகப் பிடிக்கிறார்...
உடனே, ஜகதாவின் கழுத்தை இறுகப் பிடிக்கிறார்...
''சொல்லு... யார் இப்படியெல்லாம் உன் கிட்ட கதை திரிச்சு
விட்டது?''
''கதை இல்லே. இதுதான் நிஜம். இங்கே பாருங்க அவன் ஃபிரண்ட்ஸ்
கைப்பட எழுதின கடுதாசுங்க. இங்கே பாருங்க... அமெரிக்க
எம்பஸியில கிடைச்ச தவகல்...''
ஜம்புலிங்கம், மெள்ள அவளது கழுத்திலிருந்து கையை எடுக்கிறார்.
''உன் கிட்ட சொன்னா நீ வருத்தப்படுவியேங்கறதுனாலே
சொல்லலை ஜகதா - அபர்ணா, பிருத்வியத்தான் ரொம்ப விரும்பினா.
இது எனக்குத் தெரிஞ்சுதான் நான் ஜோதீஷ்வர் அங்கேயே ஒரு
பொண்ணை லவ்பண்ணறதா உன் கிட்ட பொய் சொன்னேன்.
அப்படியும் மனசு கேட்காம அவனுக்கு லெட்டர் போட்டு
அமெரிக்காவுலேயிருந்து, அபர்ணா கல்யாணத்துக்கு வரச்சொன்னேன்.
அவ ஜாதக ராசி... மெட்ராஸ் வந்து இறங்கின மறுநாளே என் பிள்ளை
ஆக்ஸிடண்ட்லே போயிட்டான். மொத்தத்துல அபர்ணா துர்
துரதிருஷ்டக்கட்டை...''
''இந்தாங்க... சொல்ற பொய்யை அளவோட சொல்லுங்க.
ஜோதீஷ்வர்தான் செத்தான். பிருத்வி உசிரோட இருக்கான். இதோ இப்ப
வரச் சொல்லட்டுமா. உங்க கூட 'எஸ்டிடீ ல' பேசற மாதிரி நடிச்சான்.
மாடியில இருக்கற இன்னொரு கனக்ஷன் மூலமாகத்தான் பேசினான்.
இப்ப இங்க வரச் சொல்லலட்டுமா..?''
இது கமலா...
''கல்யாண ஆல்பத்தைப் பார்த்ததுலேயிருந்தே இந்த மூஞ்சிய
எங்கேயோ பார்த்ததா சந்தேகம் உறுத்திட்டே இருந்தது ஆனந்த். உங்க
அப்பா என்னை விட்டுட்டு இறந்தப்ப எனக்கு வயசு முப்பத்திரண்டு. நீ
பத்து வயசுப் பையன். அப்ப, இவர் சீர் செனத்தி எதுவுமே இல்லாம
என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதாகவும், தனக்கு ஒரு பிள்ளை
இருக்கறதாகவும் சொன்னார்...''
''உங்க கிட்ட சொன்னப்புவே இவர் என் கழுத்துல தாலி
கட்டிட்டாரு...''
''நல்ல வேளை. நான் தப்பிச்சேன். விதவைங்களைக் கல்யாணம்
செஞ்சுக்கறதா சொல்லி இப்படி சிலர் கிளம்பி....''
கமலா முடிக்கவில்லை...ஜகதா, ஜம்புலிங்கத்தின் சட்டையைப்
பிடித்துக் குலுக்குகிறாள்.
''சொல்லுங்க..! என் பிள்ளை எங்கே..?''
''நான் சொல்றேன்...''



பிருத்வி குனிந்ததலை நிமிராமல் சொல்கிறான்.
''நானும், இந்த மனுஷருமாத்தான்
மெட்ராஸ்லேயிருந்து மதுரை அழைச்சிட்டு வர்றப்பவே... இவர்தான் கொன்னோம்.
திட்டம் போட்டு மறுநாள் ஹனிமூன் போக நான் போட்டுக்கற டிரஸ்
மாதிரியே இன்னொண்ணு எடுத்து, பொணத்துக்கு மாட்டி விட்டு
டிக்கியிலத் திணிச்சார். உங்க வாரிசை குளோஸ் பண்ணின மாதிரியும்
இருக்கும். அபர்ணாவை காருலே வச்சு தள்ளிவிடறச்சே
ஆக்ஸிடண்ட்டுனு நிரூபிக்க ஒரு ஆள் தேவைப்படும். செத்தது
நான்தான்னு எல்லாரும் நம்பணும். அதே சமயத்துல செத்துப் போன
ஜோதீஷை மறைக்கவும் இது ஒரு வழியாயிடும்...''
''பாவி!! பாவி!!''
ஜம்புலிங்கம் நகர முடியவில்லை... போலீஸ் பாதுகாப்போடு
வந்திருந்த கமலா - அவரை அந்தண்டை இந்தண்டை நகர விடாமல்
செய்கிறாள்.
ஜகதாவின் அழுகைக்கு கமலாதான் தேறுதல் சொல்கிறாள்.
''எனக்கு யாருமே இல்லையே...''
''அப்படிச் சொல்லாதீங்க... நாங்க எல்லாரும் இருக்கோம்.''
கமலா சொல்ல, கைகளில் விலங்கு மாட்டிய பிருத்வி, ஆனந்தின்
அருகில் வந்து சொல்கிறான்.
''சார், நான் யாருன்னு துளிக் கூட அபர்ணாவுக்குத் தெரியாதே?''
''தெரியாது! இப்ப அவளை மெட்ராஸ்லே இல்லே விட்டுட்டு
வந்திருக்கேன். ஊருக்குப் போய்தான் விலாவாரியாச் சொல்லணும்...''
''ஐயய்யோ.. சொல்லாதீங்க சார்...''
''ஏம்பா?''
''நான் உயிரோட இருக்கேன்னு தெரிஞ்சா அவ, உங்களைக்
கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன்னு சொல்லுவா. ஒரு நல்ல
பொண்ணோட வாழ்க்கை நாசமாயிடக் கூடாது. எப்படியும் எனக்கு
ஆயுள் தண்டனை தான் கிடைக்கப் போறது. சொல்லாதீங்க சார்...
ப்ளீஸ்..''
''என்னிக்காவது ஒரு நாள் தெரியாமலா போகப் போறது..?''
''நீங்களும் நானும் மனசு வச்சாப் போதும் - நடந்ததுல அபர்ணாவை
பாதிக்கக் கூடிய எதையும் சொல்லாம மறைச்சிடலாம்...''
காப்பு மாட்டிய கரங்களுடன் சிரமப்பட்டு கை குவிக்கிறான் பிருத்வி.
எங்கேயோ சென்னையின் ஒரு மூலையில் - கண்
தெரியாவிட்டாலும் அபர்ணா - தனக்கு வரப் போகும்
மகிழ்ச்சிகரமான மண வாழ்வை எண்ணிச் சிரித்துக் கொண்டிருப்பாள்
என்பதே நிம்மதியாக இருக்கிறது அவனுக்கு.

**சுபம்.**